968

THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

"வக்கீல்"

★

இந்த இதழில்

பாலிய விவாகத் தடை சட்டத் திருத்தம்

பினல்கோடு திருத்தம்

சென்னை அவசரச் சட்டம் (ஜாகை வாடகை கண்ட்ரோல் சட்டம் நீடிப்பு)

கடனும் - வட்டியும்

லஞ்சம்

சட்டத்திலும் - எழுத்திற்கே மதிப்பு

ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டம் அமுல் நடத்த அதிகாரிகள்

கண்ட்ரோல் இதர சர்க்கார் அறிக்கைகள்

கேள்வியும்-பதிலும்

விபரங்கள் உள்ளே பார்க்கவும்

★

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

1—6

தமிழ் மாதப் பத்திரிகை

செப்டம்பர் 1949

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 SEP 1949
MADRAS

உயர்ந்த ரக உற்பத்திகளுக்கு உகந்த இடம்

வந்து பாருங்கள்

ஸ்டார் ஆப் இந்தியா
பென்சில்களுக்கு

மெட்ராஸ்
பென்சில் பாக்டரி

ஸ்டேஷனரி
சாமான்களுக்கு

வி. பெருமாள் செட்டி
அண்டு சன்ஸ்

சிறந்த லித்தோ
அச்சு வேலைகளுக்கு

ஹோ & கோ

5, ஸ்டிரிங்கர்தெரு, :: மதராஸ் -1.

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர
மாத சட்ட வெளியீடு.

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.,

"வக்கீல்"

(சந்தா விபரம்)

வருட சந்தா	... ... ரூ.	3—0—0
தனிப் பிரதி (வெளிவரும் மாதத்தில்)	...	0—4—0
முந்திய மாதப் பிரதி	...	0—6—0
வெளிநாடு வருட சந்தா	...	6—0—0

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 1 செப்டம்பர் '49 இதழ் 6

பொருள் அடக்கம்

நமது நேயர்களுக்கு	3
பாலிய விவாகத் தடை சட்டத்திருத்தம்	5
இந்தியன் பீனல்கோடு திருத்தம்	6
சென்னை 1949-ம் வருஷத்திய 1-வது அவசரச் சட்டம்	7
சென்னை 1949-ம் வருஷத்திய 2-வது அவசரச் சட்டம்	8
கடனும்-வட்டியும்	9
லஞ்சம்	13
சட்டத்திலும்-எழுத்திற்கே மதிப்பு	18
சென்னை ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டத்தை அமுல் நடத்த அதிகாரிகள்	19
கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன் விலை நிர்ணயம்-இதர சர்க்கார் அறிக்கைகள்	21
கேள்வியும்-பதிலும்	23

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். முந்திய மாத இதழ்கள் தேவையானால் பிரதி 1-க்கு அணா 6 வீதம் சேர்த்து அனுப்ப வேண்டும். "வக்கீல்" பத்திரிகை 1949 ௵ ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

2. ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. சந்தாதாரர்களாகச் சேர விரும்பும் நேயர்கள் தங்கள் விலாசத்தை கொட்டை எழுத்தில் தனித்தனி எழுத்தாக எழுதும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

N. கோபால்தாஸ் & கோ.,

வைரம், தங்க நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள்

சின்னகடைத்தெரு, திருச்சி.

நெ. 121, பெரியதெரு, கும்பகோணம்.



நல்ல சாமான்கள்! நியாயமான விலை!!

- வைரங்களில் பழைய வெட்டுமுதல் புது வெட்டுவரையில் எல்லா நகைகளும் ஒவ்வொருவருடைய விருப்பத்திற்கேற்றவாறு கிடைக்கும்.
- ஒவ்வொரு வைர நகை வேலைப்பாடுகளும் கிராக்கிகளுக்கு பூரண திருப்தி அளிக்குமாறு எங்கள் நேர்பார்வையிலேயே தயாரிக்கப்படுகின்றன. இத்துடன்கூட கிராக்கிகளின் ஆர்டரின்பேரில் தங்க நகைகளும் செய்துகொடுக்கிறோம்.
- சீமைக்கட்டி வெள்ளியில் செய்யப்பட்ட வெள்ளிப் பாத்திரங்கள் எல்லா மாதிரிகளிலும் எப்போதும் தயாராக இருக்கின்றன. கிராக்கிகளின் ஆர்டர்பேரிலும் வெள்ளிப் பாத்திரங்கள் செய்துகொடுக்கிறோம்.

தங்கள் மேலான ஆதரவை எப்போதும் கோருகிறோம்.

187689

A. M. Subbaraya Chettiar & Bros.,

GENERAL MERCHANTS & TIMBER CONTRACTORS

P. B. No. 5, Telephone: 57, Telegram: **BURMA TEAK.**

NEGAPATAM.

★

Branches :

Madras, Kumbakonam, Tanjore & Thiruvarur.

OFFICE OF THE REGISTR
SEP 1949
MADRAS

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 1 செப்டம்பர் 1949 இதழ் 6

நமது நேயர்களுக்கு

முந்திய இதழ்கள்: "வக்கீல்" பத்திரிகையை ஆரம்பம் முதல் தருவிக்காத பல நேயர்கள் முந்திய இதழ்களின் பொருளடக்கம் என்ன என்று கேட்கும் பல கடிதங்கள் நாள்தோறும் வருகின்றன. கடிதம் எழுதிய ஒவ்வொரு அன்பருக்கும் தனித் தனியாகப் பதில் போடுவது சாத்தியமில்லை. "வக்கீல்" பத்திரிகை 1949 ஹூ ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்டு மாதம் முடிய உள்ள இதழ்களில் பிரசுரமான பல முக்கிய விஷயங்களை அடுத்த பக்கத்தில் கொடுத்திருக்கிறோம். பல நேயர்களின் அபிப்பிராயத்திற்கிணங்க, ஜாடாவும் செலவழிந்து போன ஏப்ரல், மே, ஜூன் இதழ்களை மறுபடியும் அச்சடித்து அனுப்பி வருகிறோம்.

இது வரை வெளியான "வக்கீல்" இதழ்களில் பல முக்கியமான புதிய சட்டங்கள் பிரசுரமாகி இருப்பதை நேயர்கள் கவனித்திருக்கலாம். தனித் தனிப் புத்தகங்களாக பிரசுரம் செய்யக் கூடிய பல சட்டங்களை நேயர்கள் "வக்கீல்" மூலம் வாசித்து வருகின்றனர். உதாரணமாக: போக்கிய ரத்து; ஷாப் சட்டம்; விற்பனை வரி; சென்னை ஜமீன் இனம் ஒழிப்புச் சட்டம்; பலதாரத் தடைச் சட்டம்; இவை போன்ற இன்னும் பல முக்கிய சட்டங்களும் இது வரை "வக்கீல்" பத்திரிகையில் வெகு விரிவாயும் தெளிவாயும் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.

இன்னும் பல புது பகுதிகள்: இவ்விதழில் சில புது பகுதிகள் சேர்க்கப்பட்டிருப்பதை நேயர்கள் கவனிக்கலாம். பொது ஜனங்களுக்கு உபயோகமான சில பழைய சட்டங்களின் விமர்சனம் இனி ஒவ்வொரு இதழிலும் வரும். மேலும் அனுபவம் வாய்ந்த சட்ட நிபுணர்களால் பொதுவான சட்ட விஷயங்களைப் பற்றி எழுதும் கட்டுரைகளும் சேர்க்கப்படும். அடுத்த இதழிலிருந்து நேயர்கள் இன்னும் சில பகுதிகளைக் காணலாம். "பத்திரங்கள் ஸ்டாம்பு-ரிஜிஸ்டர் கட்டணம் உள்பட" என்ற பகுதி பல வகைப்பட்ட தஸ்தாவேஜுகள் எப்படி எழுதப்பட வேண்டும் என்பதையும், ஒவ்வொரு வகை தஸ்தவேஜுக்கும் ஸ்டாம்பு எவ்வளவு-ரிஜிஸ்டர் கட்டணம் எவ்வளவு என்பதையும் நேயர்கள் தெரிந்து கொள்ள உதவும். பத்திரங்கள் எழுதுவது என்பது இங்கிலாந்திலும் மேல் நாடுகளிலும் ஒரு தனிக்கலை. அதில் பயிற்சி பெற்ற நிபுணர்கள் தான் அதைச் செய்யலாம். ஒழுங்காகவும் சட்ட ரீதியாகவும் பத்திரங்கள் எழுதப்பட்டால் நம் நாட்டிலும் எவ்வளவோ வீண் விவகாரங்களும் செலவுகளும் தடைப்படும். இப்பகுதி அடுத்த இதழிலிருந்து தொடர்ச்சியாய் வெளிவரும்.

மேலும் தானே செய்து கொள்ளக்கூடிய பல சிறிய விஷயங்களைக்கூட எப்படிச்செய்வதென்று விவரம் புரியாமல் வீண் செலவும்

கால தாமதமும் நேரிடுவதுண்டு. அடுத்த இதழ் முதல் "இதை எப்படிச் செய்வது" என்ற ஒரு புதுப்பகுதியை நேயர்கள் கவனித்து வரவும்.

"கேள்வியும்-பதிலும்": "வக்கீல்" பத்திரிகையில் இப்பகுதி ஆரம்பித்தது முதல் நேயர்களிடமிருந்து கேள்விகள் அடங்கிய ஏராளமான கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. கேள்வி கேட்பவர்கள் ஒவ்வொருவருக்கும் தனியாக பதில் எழுதி அனுப்புவது சாத்தியமில்லை. கேள்விகளுக்குப் பதில் பத்திரிகையின் வாயிலாகத் தான் கொடுப்பது சாத்தியமாகும். மேலும் இம்முறைதான் பலருக்கும் உபயோகப்படக் கூடியது. "கேள்வியும்-பதிலும்" என்ற பகுதியில் முதலில் இருக்கும் குறிப்பை கவனித்துக் கேள்விகளை அமைக்கும்படி கேள்விகள் அனுப்பும் நேயர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிக் கடிதங்கள்: "வக்கீல்" பத்திரிகை மேற்கொண்ட பணியை அங்கீகரித்து ஆசி கூறி பல கடிதங்கள் வராத நாட்களே இல்லை என்று சொல்லலாம். ஆசிக்கடிதம் அனுப்பிய ஒவ்வொரு அன்பருக்கும் இதன் மூலம் "வக்கீலின்" மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

"வக்கீல்" முந்திய இதழ்களின் பொருளடக்கம்

ஏப்ரல் 1949: (1) எமது பத்திரிகை. (2) குறிப்புகள். (3) சென்னை விவசாயி கடன் நிவாரண திருத்தச் சட்டம் போக்கிய ரத்து. (4) எடை அளவை ஒழுங்குச் சட்டம். (5) கண்ட்ரோல் - லைசென்சு - ரேஷன் – விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள். (6) கடைசியில் வந்த அறிக்கைகள். (7) கள்ள மார்க்கெட் மசோதா. (8) ஹிந்து(லா)சட்ட தொகுப்பு மசோதா.

மே 1949: (1) எங்கள் கடமை. (2) ஷாப் சட்டம். (3) சென்னை ஹிந்து பலதாரத்தடை விவாக ரத்துச் சட்டம். (4) ஜீவனும்ச சட்ட மாறுதல். (5) குதிரைப் பந்தய (சூதாட்ட) ஒழிப்பு சட்டம். (6) வீண் வியாஜ்ய தடைச் சட்டம். (7) மாகாண சர்க்கார் நேரடியாக பஸ்-சர்வீஸ் நடத்த சட்டம். (8) மறுபடியும் விவசாயி கடன் நிவாரணச் சட்டத்திருத்தம். (9) பொதுப் புத்தக சாலைச் சட்டம் (10) விற்பனை வரி. (11) கண்ட்ரோல் - லைசென்சு ரேஷன் - விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள்.

ஜூன் 1949: (1) குறிப்புக்கள். (2) ஷாப் சட்டம் (தொடர்ச்சி). (3) ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டம். (4) விற்பனை வரி. (தொடர்ச்சி). (5) கண்ட்ரோல் - லைசென்சு ரேஷன் – விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள். (6) கிராமப் பஞ்சாயத்து மசோதா. (7) கேள்வியும்-பதிலும்

ஜூலை 1949: (1) புதிய வரிகள். (2) ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டம் (தொடர்ச்சி). (3) ஷாப் சட்டம் (தொடர்ச்சி), (4) விற்பனை வரி (தொடர்ச்சி). (5) கண்ட்ரோல் லைசென்சு - ரேஷன் - விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள்.

ஆகஸ்ட் 1949: (1) நமது சுப்ரீம் கோர்ட் (2) ஹிந்து கலப்பு மணச் சட்டம். (3) கண்ட்ரோல் சட்டத்திருத்தம். (4) பத்திரங்கள் ரிஜிஸ்டர் செய்ய வரி சர்டிபிகேட். (5) பாகிஸ்தானிலிருந்து வருவோரைக் கட்டுப்படுத்தும் சட்டம். (6) சென்னை ஆலயப் பிரவேச (திருத்த)ச் சட்டம். (7) சென்னை ஜமீன் இனும் ஒழிப்புச் சட்ட விதிகள். (8) 1949-50 இன்கம் டாக்ஸ் விகிதம். (9) ஷாப் சட்டம் (தொடர்ச்சி), (10) விற்பனை வரி (தொடர்ச்சி) (11) கண்ட்ரோல் - லைசென்சு - ரேஷன் - விலை நிர்ணயம் இதர சர்க்கார் அறிக்கைகள். (12) விவசாய (அபிவிருத்தி) மசோதா. (13) கேள்வியும்-பதிலும்.

———o———

பாலிய விவாகத் தடை சட்டத் திருத்தம்

பெண்களுக்கு 15 வயது பூர்த்தியான பிறகுதான் மணம் செய்யலாம்: (மத்திய சட்டம். 1949-ஆம் வருடத்திய 41-வது ஆக்ட். 15—7—49-ல் மே. த. கவர்னர் ஜெனரல் அவர்களின் அங்கீகாரம் பெற்று, 2—8—1949 சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.) பாலிய விவாகத்தடைச் சட்டம் 1929-ல் ஏற்பட்டது. இச்சட்டத்தைச் சட்டசபையில் கொண்டுவந்த ஹரபில்தாஸ் சர்தா என்பவர் பெயரால் இச்சட்டத்தையே 'சாரதா' சட்டம் என்று சொல்வதுண்டு. இச்சட்டத்தால்தான் இந்தியாவில் முதல் முதல் பாலிய விவாகம் தடைப்பட்டது. இச்சட்டப்படி மணம் செய்து கொள்ளும் மணமகனுக்கு 18 வயது பூர்த்தி ஆகியும் மணமகளுக்கு 14 வயது பூர்த்தி ஆகியும் இருக்கவேண்டும் என்று இருந்தது. இப்பொழுதுஏற்பட்டிருக்கும் திருத்தச்சட்டப்படி இனி மண மகளுக்கு 15 வயது பூர்த்தியாகி இருக்கவேண்டும். இனி மணம் செய்து கொள்ளும் தம்பதிகளில் மணமகன் 18 வயது பூர்த்தி ஆகாமலிருந்தாலும் அல்லது மணமகள் 15 வயது பூர்த்தி ஆகாமலிருந்தாலும் 'பாலிய விவாகம்' ஆகும். அது குற்றமாகும். பழைய சட்டப்படி 18 வயதுக்கு மேல் 21 வயதுக்குள் இருக்கும் மண மகன் பாலிய விவாகம் செய்து கொண்டால் அக்குற்றத்திற்கு அவனுக்கு ரூ. 1000 வரை அபராதம் விதிக்கப்படலாம் என்று இருந்ததை இத்திருத்தச் சட்டம் மாற்றி, அவ்விதம் பாலிய விவாகம் செய்து கொள்பவருக்கு 15 நாள் வரை சிறைத்தண்டனையும், அல்லது ரூ. 1000 வரை அபராதமும் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்று திருத்தப்பட்டிருக்கிறது. அதாவது 15 வயது பூர்த்தி ஆகாத பெண்ணை மணம் செய்து கொள்ளும் மாப்பிள்ளைக்கு இத்தண்டனை. அப்படி பாலிய விவாகம் செய்துகொள்ளும் புருஷன் 21 வயதுக்கு மேல் இருந்தால் பழைய சட்டப்படி அவருக்கு ஒருமாதம் வரை சிறைத் தண்டனை அல்லது ரூ. 1000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம் என்று இருந்ததில் இப்பொழுது தண்டனை அதிகமாக்கப் பட்டிருக்கிறது. இதற்குத் திருத்தச்சட்டப்படி 3 மாதம் வரை சிறைத் தண்டனையும் அத்துடன் எவ்வளவு வேண்டுமானாலும் அபராதமும் சேர்த்து விதிக்கப்படும்.

அவ்விதமாகவே பழைய சட்டத்தில் பாலிய விவாகத்தை நடத்தி வைப்பவர்களுக்கும் ஏற்பாடு செய்கிறவர்களுக்கும், பாலிய விவாகம் நடக்கும்படி அனுமதித்த (அல்லது அசட்டையால் தடுக்காமல் விட்ட) பெற்றோர், கார்டியன், போஷகர் முதலியவருக்கும் 1 மாதம் வரை சிறைத் தண்டனையும் அல்லது ரூ. 1000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்று இருந்ததை மாற்றி, 3 மாதம் வரை சிறைத்தண்டனையும் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு அபராதமும் சேர்த்து விதிக்கப்படும் என்று திருத்தப்பட்டிருக்கிறது.

பழைய சட்டத்தில் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள்தான் பாலிய விவாகத்தைப் பற்றிய (கம்ப்ளெயிண்ட்களை) பிராதுகளை வாங்கலாம்; அவர்களேதான் விசாரணை செய்யவேண்டுமென்று இருந்தது. இத்திருத்தச்சட்டப்படி அவர்களிடம்தான் இப்பொழுதும் பிராதுகள் தாக்கல் செய்யப்படவேண்டும். ஆனால் பூர்வாங்க விசாரணை செய்ய அவர்கள் தங்களுக்குட்பட்ட எந்த

மாஜிஸ்ட்ரேட்டுக்கும் அனுப்பலாம். முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுக்குத்தான் அனுப்ப வேண்டுமென்பதில்லை.

பழைய சட்டத்தில் பாலிய விவாகத்தைப் பற்றி எவர் பிராதுகொடுத்தாலும் அவரிடம் ஜாமீன் வாங்கிக்கொள்ளலாம் என்று இருந்த ஷரத்து இப்பொழுது ரத்து செய்யப்பட்டது.

பாலிய விவாகம் என்ற குற்றம் நடந்து ஒரு வருடமான பிறகு அதைப்பற்றிய பிராதைக் கோர்ட்டில் வாங்கிக் கொள்ளக் கூடாதென்று இருந்த ஷரத்து மாற்றப் படவில்லை. அது அப்படியே இருக்கிறது.

பாலிய விவாகம் நடக்கும் தறுவாயிலிருந்தால் அதைத்தடுக்க நீதிபதி இஞ்சங்ஷன் என்ற தடை உத்தரவு செய்யலாம் என்றும் அதை மீறினால் குற்றம் என்றும் இருக்கும் ஷரத்துகளிலும் எவ்வித மாறுதலுமில்லை.

இந்தியன் பீனல் கோடு திருத்தச் சட்டம்

(கார்டியனைவிட்டு மைனர்களை அழைத்துச் செல்வது—துராகிருதப் புணர்ச்சி—இவை சம்பந்தமாய் வயது அதிகரிக்கப் பட்டிருக்கிறது):—

இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களையும், தண்டனைகளையும் குறித்த 1860-ம் வருடத்திய 45-வது சட்டம் உலகப் பிரசித்திபெற்றது. இது மேனாட்டுச் சட்ட மேதாவிகளால் அடிப்படையான நீதி சாஸ்திர தத்துவங்களை அனுசரித்து, சாங்கோபாங்கமாக வகுக்கப்பட்டிருக்கிறது. இதில் 511 செக்ஷன்கள் உண்டு. மிகச் சிறிய செய்கைகள் முதற்கொண்டு யுத்தம், கொலை போன்ற சம்பவங்கள் வரை எவை குற்றமாகும் என்று நிர்ணயிக்கப்பட்டும், அதற்கேற்ற தண்டனைகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன.

இச்சட்டத்தின் 361-வது செக்ஷன் பிரகாரம் ஒரு கார்டியனுடைய சம்ரட்சணையில் இருக்கும் 14 வயதுக்குட்பட்ட ஆணையாவது அல்லது 16 வயதுக்குட்பட்ட பெண்ணையாவது அக்கார்டியனுடைய சம்மதமில்லாமல் அவருடைய சம்ரட்சணையை விட்டு அகற்றிச் சென்றாலும், ஆசைகாட்டி அழைத்துச் சென்றாலும் குற்றமாகும். (கார்டியன் என்பவர் பெற்றோராக இருந்தாலும் இருக்கலாம். சட்டப்படி மைனருடைய போஷணைக்குப் பாத்தியமுள்ள வேறு எவராகவும் இருக்கலாம்.) இதில் கண்டிருக்கும் அகற்றப்படும் மைனர்களுடைய வயதை உயர்த்த ஒரு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (1949-ம் வருடத்திய 42-வது திருத்தச் சட்டம். 15—7—49-ல் மே. த. கவர்னர் ஜெனரல் அங்கீகாரம் பெற்று 2—8—1949 சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரமாகி இருக்கிறது.)

இத்திருத்தச்சட்டப்படி கார்டியனுடைய சம்ரட்சணையிலிருந்து 16 வயதுக்குட்பட்ட ஆண் குழந்தையாவது, 18 வயதுக்குட்பட்ட பெண் குழந்தையையாவது மேற்கண்டபடி கார்டியனுடைய சம்மதமின்றி அகற்றினாலும், ஆசைகாட்டி அழைத்துச் சென்றாலும் அது குற்றமாகும்.

அப்படி மைனரை அகற்றிச் செல்லும் "கிட்னாப்பிங்" என்ற குற்றத்திற்குச் சந்தர்ப்பத்திற்கும் எண்ணத்திற்கும் ஒற்றவாறு கடும் தண்டனைகள் ஏற்கனவே உள்ள சட்டத்திலேயே விதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியன் பீனல் கோடு 375-வது செக்ஷன் என்பது 'ரேப்' எனப்படும் துராகிருதப் புணர்ச்சி என்ற குற்றம் என்ன என்று விவரிக்கின்றது. அதில் ஒரு ஸ்திரீயின் இஷ்டத்திற்கு மாறாகவாவது, அவருடைய சம்மதமில்லாமலாவது, அவளைக் கொலை அல்லது துன்புறுத்துவதாகப் பயமுறுத்தியாவது, அவளுடைய புருஷன் தான் தான் என்று ஏமாற்றியாவது துராகிருதப் புணர்ச்சி செய்தால் 'ரேப்' என்ற குற்றம் ஏற்படும். தவிர அவளுடைய சம்மதம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவளுக்கு 14 வயது பூர்த்தி ஆகாவிட்டால் அவளுடன் புணர்ச்சி செய்வதும் 'ரேப்' என்ற குற்றமாகும். 13 வயதுக்கு மேற்படாத தன் மனைவியையும் ஒருவர் புணர்ச்சி செய்தாலும் அதே குற்றம்தான். இதில்

உள்ள வயது இப்போது ஏற்பட்டிருக்கும் திருத்தச் சட்டப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது. அதாவது, 16 வயது பூர்த்தியாகாத ஒரு ஸ்திரீயுடன் (அவள் சம்மதித்தாலும் சம்மதிக்காவிட்டாலும்) புணர்ச்சி செய்வது, கணவனுக இருந்தால் 15 வயது பூர்த்தியாகாத தன் மனேவியுடன் (இதிலும் அவள் சம்மதித்தாலும் சம்மதிக்காவிட்டாலும்) புணர்ச்சி செய்வதும் 'ரேப்' அல்லது தராகிருதப் புணர்ச்சி என்ற குற்றமாகும். ஆனல், கணவனே இக்குற்றம் செய்திருந்தால் அக்குற்றம் நடந்து ஒரு வருடத்திற்குப் பிறகு அதைப்பற்றிய பிராதைக் கோர்ட்டில் எற்றுக்கொள்ளமாட்டார்கள்; மேலும், இத்திருத்தச் சட்டம் அமுலுக்கு வருமுன் (15—7—49-க்கு முன்) கலியாணமாகி இருந்து கலியாண காலத்தில் பெண்ணுக்கு 13 வயதும் பூர்த்தியாகி இருந்தாலும் இக்குற்றத்தைப்பற்றிய பிராதைக் கோர்ட்டில் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று கிரிமினல் புரொஸீஜர் கோடில் செக்ஷன் 198A என்று புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதேவிதமாய் கிரிமினல் புரோஸீஜர் கோட் 552-வது செக்ஷனில் 16 என்று கண்டிருக்கும் வயது 18 என்று திருத்தப்பட்டிருக்கிறது. இதன்படி சட்ட விரோதமான காரியங்களுக்காக, 18 வயது பூர்த்தி ஆகாத ஸ்திரீயைப் பலாத்காரமாகவாவது அல்லது ஏமாற்றியோ ஓரிடத்தைவிட்டு அழைத்துப்போய்விட்டதாகப் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் அல்லது ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிடம் (கம்பிளெயிண்ட்) பிராது கொடுத்தால் உடனே அவர் அந்த ஸ்திரீயை விடுவிக்கும்படிக்கும் அல்லது அவருடைய புருஷன் அல்லது பெற்றோர் அல்லது கார்டியனிடம் ஒப்படைக்கும்படி உத்திரவு செய்யலாம்.

சென்னை 1949-ம் வருஷத்திய 1-வது அவசரச்சட்டம்

சென்னை 1947-ம் வருஷத்திய பொது அமைதிப் பராமரிப்புச் சட்டத்தைப் பற்றிய சந்தேகங்களை நிவர்த்திசெய்வது: சாதாரணமாய் சட்டங்கள் இயற்றப்படும் முறை என்னவென்ருல் முதலில் சட்டசபைகளில் நிறைவேறி, பிறகு கவர்னர் அல்லது கவர்னர் ஜெனரல் அவர்களின் அதிகாரம் பெற்று சட்டமாகும். சர்க்கார் கெஜட்டில் முதல் முதல் பிரசுரம் செய்யப்படும் தேதி முதல் அமுலுக்கு வரும். ஆனல் சட்ட சபைகள் கூடாத சமயங்களில் அவசர நிமித்தம் "ஆர்டினன்ஸ்" என்று சொல்லப்படும் அவசரச்சட்டங்கள் இயற்ற மாகாண கவனர்களுக்கும், கவனர் ஜெனரல் அவர்களுக்கும் அதிகாரமுண்டு. அவசரச்சட்டங்கள் ஆறுமாதத்திற்கு மேல் அமுலில் இருக்காது. அதற்குள் சட்ட சபைகள் கூடி அதே விஷயத்தை சாதாரண முறையில் சட்டமாக்கிக்கொள்ளலாம். அப்படி செய்யப்படா விட்டால் அவசரச்சட்டம் தானுக ரத்தாகிவிடும்.

1947-ஆம் வருடத்திய 1-வது சட்டம் என்பது சாதாரண முறையில் சென்னை சட்ட சபையால் நிறைவேற்றப்பட்டு சட்டமானது. இச்சட்டத்திற்கு "பொது அமைதி பராமரிப்புச்சட்டம்' என்று பெயர். பொது ஜனங்களின் நன்மையையும், பொது அமைதியையும் உத்தேசித்து மாகாண சர்க்காருக்கு இச்சட்டம் சில விசேஷ அதிகாரங்களைக் கொடுத்தது. உதாரணமாய் பொது அமைதியை பங்கம் செய்யக்கூடிய ஒரு நபரை (அவர் பேரில் கோர்ட்டில் யாதொரு நடவடிக்கையும் தொடராமலே) சர்க்காரே பந்தோபஸ்தில் வைக்கலாம். கூட்டு அபராதங்கள் விதிக்கலாம். இவ்விதம் சர்க்காருக்கு இன்னும் சில விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டது. இச்சட்டத்தின் முதல் செக்ஷன்படி இச்சட்டம் ஒரு வருடத்திற்குத்தான் அமுலிலிருக்கும் என்று கண்டிருந்தது. ஆனல் இச்சட்டத்தை நீடித்துக் கொண்டே இருக்கும்படி செய்ய சர்க்காருக்கு அதிலேயே அதிகாரமளித்தது. ஒரு தடவைக்கு ஒரு வருடத்திற்கு மேல் போகாமல் மாகாண சர்க்கார் இச்சட்டத்தை நீடித்துக் கொண்டே போகலாம். இச்சட்டம் 11—3—1947-ல் அமுலுக்கு வந்தது. ஆனல் 12-3-1948 முதல்

ஒரு வருடத்திற்கும் மறுபடி 12—3—1949 முதல் ஒரு வருடத்திற்கும் இது நீடிக்கப் பட்டிருப்பதாக சென்னை சர்க்கார் அவ்வப் பொழுது பிரகடனம் செய்தார்கள். அப் படி மாகாண சர்க்காரால் இச்சட்டம் நீடிக் கப்பட்டது செல்லாதென்றும் பிறகு இச்சட் டத்தில் சில திருத்தங்கள் 1948-ல் செய்யப் பட்ட காலத்தில், தாய்ச்சட்டமே அமுலில் இல்லாதபொழுது திருத்தச் சட்டம் உபயோகமற்றதென்றும், இச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களால் கோர்ட்டில் வாதிக் கப்பட்டு சில சந்தேகங்கள் கிளப்பப் பட்டன. அச்சந்தேகங்களைத் தீர்க்கவே இந்த அவசரச்சட்டம் கவர்னர் அவர்களால் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. தாய்ச் சட்டம் எப்பொழுதும் அமுலில் இருந்த தென்றும், திருத்தச்சட்டம் ஏற்படும் பொழுதும் அமுலில் இருந்ததென்றும் அதன்படி சர்க்காரால் எடுத்துக் கொள்ளப் பட்ட எல்லா நடவடிக்கைகளும் சட்ட பூர்வமானதுதான் என்றும், தாய்ச்சட்டம் 12—3—1948-க்குப் பிறகு அமுலில் இல்லை என்ற கக்ஷி சொல்லக்கூடாதென்றும் இவ்வவசரச் சட்டம் தெளிவு படுத்து கின்றது. மேலும் இந்த அவசரச்சட டத்தில் ஒரு புது ஷரத்தும் (செக்ஷன் 4 A என்று) சேர்க்கப்பட்டிருக்கின்றது. அதா வது பாதுகாப்பில் வைக்கப்படும் நபருக்கு அவர் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் காரணத்தை தெரிவிக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படி தெரிவிக்கப்படும் காரணம் தாமதமாகத் தெரிவிக்கப்பட் டாலும் பாதகமில்லை; காரணம் போதா தென்றாவது, சரியான விளக்கமில்லை என்றாவது கருதப்படமாட்டாது. அது எப்படி இருந்தாலும் செல்லுபடியுள்ளதே யாகும் என்று தெளிவு செய்யப்பட்டிருக் கிறது.

(11-8-49 சென்னை சர்க்கார் விசேஷ கெஜட் பாகம் IV B பக்கம் 139)

சென்னை 1949-ம் வருஷத்திய 2-வது அவசரச்சட்டம்

சென்னை சட்ட சபையால் 1946-ல் நிறைவேற்றப்பட்ட சில சட்டங்களில் அந்தந்தச் சட்டம் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில்தான் அமுலில் இருக்குமென்றும் அதற்குப்பிறகும் மேற்படி சட்டங்கள் அமுலில் இருக்கவேண்டிய அவசியம் இருந் தால் அந்தந்த சட்டத்தை மாகாண சர்க் காரே கெஜட்டில் விளம்பரம் செய்து நீடித்துக் கொள்ளலாம் என்றும் அச்சட் டங்களிலேயே மாகாண சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. அந்த அதிகாரத்தை உபயோகப்படுத்தி சென்னை சர்க்கார் சில சட்டங்களை, அந்தந்த சட் டத்தில் கண்ட காலத்திற்குப் பிறகும் நீடித்து வந்தனர். சட்டங்கள் இயற்ற சட்ட சபைகளுக்கும், சட்ட சபைகள் கூடாத காலங்களில் அவசர நிமித்தம் ஆர்டினன்ஸ் என்ற அவசர சட்டங்களை இயற்ற மாகாணத்தில் கவர்னருக்குமதானே அதிகாரம் இருக்கிறது; மாகாண சர்க்கார் (மந்திரிகள் கொண்ட சபை) எப்படி ஒரு சட்டத்தை இயற்ற முடியாதோ அப்படியே ஒரு சட்டத்தின் ஆயுளையும் அவர்கள் நீடிக்கவும் முடியாதென்றும் சர்க்காரால் நீடிக்கப்பட்டதாக நினைத்துக் கொண்டி ருக்கும் சட்டங்கள் அமுல் இழந்து விட்ட தென்றும் ஒரு சட்ட பூர்வமான சந்தேகம் ஏற்பட்டது. அச்சந்தேகத்தை நிவர்த் திக்கவே சட்ட சபை கூடாத சமயத்தில் இந்த அவசரச் சட்டம் கவர்னர் அவர் களால் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. இதன்படி (1) 1946-ம் வருடத்திய அத்தி யாவசிய பொருள் கட்டுப்பாடு (தற்காலிக அதிகார)ச்சட்டம் 1-10-1948 முதலும்

கும்பகோணம் ஸ்ரீ சக்கரபாணி சுவாமி தெற்கு வீதியிலுள்ள
கணபதி விலாஸ் காபி ஹோட்டலில் (போர்டிங் & லாட்ஜிங்)
ருசிகரமான சாப்பாடும் சிற்றுண்டியும் கிடைக்கும். Prop: G. கணேசன்

போன்றவைகளின் பேரில் கொடுக்கப்படும் தொகைகளுக்கும் இச்சட்டம் கிடையாது.

இச்சட்டத்திலும் கடனுக்கு வட்டி விகிதம் வியக்தமாய் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால் பெந்தகம் ஒத்தி ஜாமீன் போன்ற ஈடுகளின் பேரில் வாங்கி இருக்கும் கடன்களுக்கு ரூ. 100-க்கு ஒரு வருடத்திற்கு ரூ. 9-க்கு மேலும் மற்றக் கடன்களுக்கு ரூ. 15-க்கு மேலும் வட்டி இருந்தால் முன் சொன்ன கடுவட்டிச் சட்டத்தை நீதிபதி உபயோகப்படுத்தி அதிகமாக இருக்கும் வட்டியைக் குறைக்கலாம். ஒவ்வொரு வழக்கின் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு நீதிபதிக்கு எது அதிக வட்டி என்று தோன்றுகிறதோ அதுதான் குறைக்கப்படும். குறைந்த வட்டி போட்டிருந்தாலும் (காம்பவுண்ட் இண்டரஸ்ட் என்ற) மடங்கு வட்டி மேற்கண்ட வட்டி விகிதத்திற்குமேல் போனாலும் அதை குறைக்க நீதிபதிக்கு அதிகாரம் உண்டு.

இச்சட்டத்தில் முக்கியமாய் கவனிக்கப்படவேண்டியது என்னவென்றால்: லேவாதேவி என்ற கடன் கொடுத்து வாங்கும் தொழில் நடத்துபவர்கள் செய்ய வேண்டிய சில கடமைகள் இருக்கின்றன. அவைகளைச் செய்யத் தவறியவர்கள் சில சந்தர்ப்பங்களில் ஜாடா வட்டியையும் இழந்து விடுவார்கள், சில சந்தர்ப்பங்களில் கோர்ட் செலவு தொகையை இழந்து விடுவார்கள். கொடுக்கல் வாங்கல் தொழில் நடத்துபவர்கள் (1) கடனாளிக்குக் கொடுக்கும் கடன் தொகை, கடன் கொடுத்த தேதி வட்டி விகிதம், கடனாளியால் கொடுக்கப்பட்ட தொகைகளும் கொடுத்த தேதிகளும், இவைகளை ஒவ்வொரு கடனாளியைப் பற்றியும் தனித்தனியாய் காண்பிக்கக்கூடிய முறையில் கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி கணக்கு வைத்துக் கொள்ளாதவர்கள் கோர்ட்டில் தாவா செய்தால் அவர்கள் செலவு தொகைகளை இழப்பார்கள். (2) கடன் வாங்கியவரால் திருப்பிக் கொடுக்கப்படும் தொகைகளுக்கு உடனுக்குடன் கடன் கொடுத்தவர் ரசீது கொடுக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் தவறிய காலத்திற்குள்ள வட்டியையும் கடன் கொடுத்தவர் இழக்க வேண்டும். (3) கடன் வாங்கியவர் தமக்கு, கணக்கு நகல் வேண்டுமென்று கடன் கொடுத்தவரை எழுத்து மூலம் கேட்டால் அவருக்கு ஒரு மாதத்திற்குள் கணக்கு நகல் அனுப்ப வேண்டும். கணக்கு நகலை கடனாளிக்கு ரிஜிஸ்டர் தபாலில் (அக்னலட்ஜ்மெண்ட் வரும்படி) அனுப்ப வேண்டும். அல்லது கடன் வாங்கியவரிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டும் கொடுக்கலாம். ஒரு மாதத்திற்குள் கணக்கு நகல் கொடுக்காவிட்டால் எவ்வளவு காலம் அது கொடுக்கப்படாமலிருக்கிறதோ அவ்வளவு காலத்திற்குள்ள வட்டி போய்விடும். கணக்கு நகல் கொடுக்க ஒரு கட்டணம் வாங்கலாம். கடன் தொகை அசல் ரூ. 50-க்குள் இருந்தால் 1 அணாவும், அதற்குமேல் ரூ. 100-க்குள் இருந்தால் 2 அணாவும் அதற்குமேல் ரூ. 300-க்குள் இருந்தால், 3 அணாவும் அதற்குமேல் ரூ. 500-க்குள் இருந்தால் 4 அணாவும் கடனாளி பேரில் பற்று எழுதலாம். கணக்கு நகல் அனுப்பத் தபால் செலவையும் பற்று எழுதலாம். ஆனால் இவை இரண்டுக்கும் வட்டி கிடையாது. கணக்கு நகல் சரியானதென்று கடன் கொடுத்தவர் அல்லது அவருடைய ஏஜண்டின் உறுதிமொழிக் கையெழுத்தும் கணக்கு நகலை அசலுடன் ஒத்துப்பார்க்கும் ஒருவருடைய சர்டிபிகேட்டும் கணக்கு நகலின் அடியில் இருக்க வேண்டும்.

இச்சட்டமும் "விவசாயி" களுக்குத் தேவையில்லை. ஏனென்றால் முன் சொன்னபடி அவர்களுக்கு அதிக நன்மை அளிக்கக் கூடிய வேறு சட்டம் இருப்பதால்.

அடுத்து வரும் இதழ்களில் ஈடுவைத்து கடன் வாங்குபவர்கள் சட்டமும் (சென்னை பான் புரோகர்ஸ் ஆக்ட்) சென்னை விவசாயிகள் கடன் நிவாரண சட்டமும் (எல்லாத் திருத்தங்களுடன்) எழுதப்படும்.

ஆனால், இவ்வதிகாரங்களைச் செலுத்துவதில் இரண்டு நிபந்தனைகள் உண்டு. அதாவது, கடன் தேதியிலிருந்து பன்னிரண்டு வருடங்களுக்குள் இருக்கும் கணக்குகளை மட்டில்தான் கோர்ட்டில் பரிசிலனை செய்யலாம். கோர்ட்டில் ஏதாவது டிக்ரிகள் ஏற்கனவேயே ஏற்பட்டு அந்தத் தொகைகளையும் சேர்த்து கணக்குப்போடும்படி ஏற்பட்டால் அவ்விதம் ஏற்பட்டுள்ள டிக்ரி தொகைள் பாதிக்கப்படமாட்டா. வட்டியும் மிக அதிகம், கடன் கொடுத்தவரும் நியாயத் தவருக நடந்திருக்கிறார் என்று தோன்றும் வழக்கில் மட்டில்தான் நீதிபதிக்கு மேற்கண்ட அதிகாரங்கள் இச்சட்டப்படி உண்டு. "நியாயத் தவறு" என்றால் என்ன? மிதமிஞ்சி வட்டி கொடுப்பதாகக் கடனாளி ஒப்புக்கொண்டிருப்பதிலிருந்தே நியாயத் தவறு இருக்கிறதென்று நீதிபதி ஊகித்துக்கொள்ளலாம். கடன் கொடுத்தவர் தம் தொகை திரும்பி வருமோ வராதோ என்று பயப்படக்கூடிய நிலைமையில் கடன் கொடுத்தாரா; வட்டியைத் தவிர வேறு விதமான செலவுகளைக் கடன் வாங்கியவர் தலையில் வைத்திருக்கிறாரா; மடங்கு வட்டி போட்டிருக்கிறாரா; கடன் கொடுத்தவர் ஏதாவது ஜாமீன் வாங்கி இருக்கிறாரா; கடன் வாங்கியவர் அந்தஸ்து என்ன; இதற்கு முன் அவருக்குக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறதா; கடன் வாங்கும்பொழுது கடன் வாங்கியவருக்கு என்ன நெருக்கடி இருந்தது; அது கடன் கொடுத்தவருக்குத் தெரியுமா என்பதைப் போல் பல விஷயங்களையும் ஆராய்ந்து பார்த்து அதில் "நியாயத்தவறு" இருக்கிறதா என்று நீதிபதி முடிவுக்கு வரவேண்டும்.

கடன் வாங்கி இருக்கும் "விவசாயி"களுக்கு இச்சட்டம் தேவையில்லை. அவர்களுக்கு ஏராளமான பரிகாரங்கள் அளிக்கும் சட்டம் வேறு இருக்கிறது. "விவசாயி" அல்லாதவருக்குத்தான் இச்சட்டம் கொஞ்சம் பரிகாரம் அளிக்கிறது. இச்சட்டத்தால் கடன் வாங்கியவருக்கு அதிக பிரயோசனமில்லை.

உதாரணமாக:— ஆரம்பத்தில் ஒரு கடனாளி ரூ. 23 கடன் வாங்கினார். வட்டியும் அதிகமில்லை. ஆனால், 3 வருடங்களுக்கு ஒருமுறை வட்டியை அசலுடன் சேர்த்துச் சேர்த்து, கடைசியில் ரூ. 5250 கணக்காயிற்று. இச்சட்டப்படி அக்கடனாளிக்குப் பரிகாரமளிக்க காரணங்கள் இல்லையென்று லாகூர் ஹைகோர்ட்டார் ஒரு வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றனர். (1935 லாகூர் பக்கம் 38) வருடம் 1-க்கு ரூ. 100-க்கு ரூ. 15 அதிக வட்டி இல்லை என்று பாட்னா ஹைகோர்ட்டார் ஒரு வழக்கில் சொல்லி இருக்கின்றனர். (1945 பாட்னா — பக்கம் 297) ஒரு வழக்கில் 100-க்கு வருடம் 1-க்கு ரூ. 24 அதிக வட்டி என்று அதை 100-க்கு ரூ. 15 ஆக, பிரிவி கவுன்சிலால் குறைக்கப்பட்டது. (1940-1-மதராஸ் லா ஜர்னல் பக்கம் 68) ஆனால், வருடம் 1-க்கு ரூ. 100-க்கு ரூ. 25 வீதம் மடங்கு வட்டி அப்படி ஒன்றும் அதிக வட்டி இல்லை என்று ஒரு கல்கத்தா வழக்கில் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். (1930 கல்கத்தா—பக்கம் 776)

கடனாளிகளின் பாதுகாப்புச் சட்டம்:— (டெட்டர்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட்—சென்னை 1934-ம் வருடத்திய 7-வது ஆக்ட்) இச்சட்டம் லேவாதேவி கடன் கொடுத்து வாங்கும் தொழில் நடத்துபவர் ஒரு தடவையில் ரூ. 500-க்குள் கொடுக்கும் கடன்களைப்பற்றிமட்டில்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கும் தொழில் நடத்துபவர்களுக்குத் தனிச் சட்டம் இருப்பதால் இச்சட்டம் கிடையாது. மேலும், சர்க்கார் போஸ்ட் ஆபீஸ் ஸேவிங்க்ஸ் பாங்கி; மற்றப் பாங்கு கம்பெனிகள்; கோவாபரேடிவ் சங்கங்கள் இவைகளில் போடும் தொகைகளுக்கும், கொடுக்கல் வாங்கல் தொழில் அல்லாமல் வேறு தொழில் செய்பவர்கள் அத்தொழில் சம்பந்தமாய்க் கொடுக்கும் அட்வான்சுகளுக்கும், குத்தகைதார்களுக்கும் விவசாயம் செய்யக்கொடுக்கப்படும் முன் பணத்திற்கும் பிராமிசரி நோட்டைத் தவிர மற்ற உண்டியல் செக்

187689

இவ்விஷயங்களைக் கடன் கொடுத்தவர்களும் கடன் வாங்கியவர்களும் நன்றாய்த் தெரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம்.

சென்னை மாகாணத்தில் இதுசம்பந்தமாக அமுலில் இருக்கும் முக்கிய சட்டங்கள் (1) சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம். (2) ஈடு வைத்துக் கொண்டு கடன் கொடுப்பவர்கள் சட்டம் (பான் புரோகர்ஸ் ஆக்ட்) (3) கடுவட்டிக் கடன் சட்டம் (யுஷூரியஸ் லோன்ஸ் ஆக்ட்—என்ற மத்தியச்சட்டம்) (4) கடனாளிகளின் பாதுகாப்புச்சட்டம் (டெட்டர்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட்).

இச்சட்டங்கள் எல்லாம் எல்லோருக்கும் பொருந்தாது. உதாரணமாக, சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் "விவசாயி" அல்லாதவர்கள் வாங்கும் கடனைப் பாதிக்காது. ஒவ்வொரு சட்டத்தைப் பற்றியும் சொல்லப்படும்பொழுது அச்சட்டம் யாருக்குப் பொருந்தும், எவ்வித கடன்களைப் பாதிக்கும் என்று தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

இனி இச்சட்டங்களை ஒவ்வொன்றாய்க் கவனித்துப் பார்ப்போம்.

கடுவட்டிக் கடன் சட்டம்: (யுஷூரியஸ் லோன்ஸ் ஆக்ட் என்ற 1918-ம் வருடத்திய 10-வது மத்தியச் சட்டம்) இது அகில இந்தியாவுக்கும் உள்ள சட்டம். இச்சட்டம் ஏற்படுவதற்கு முன், ஒரு கடனாளி அளவுக்கு மிஞ்சிய வட்டி கொடுப்பதாய் ஒப்புக்கொண்டு, கடன் வாங்கி இருந்தால் அது எவ்வளவு அதிகமான வட்டியாக இருந்தாலும் அதைக் குறைக்க, கோர்ட்டுகளுக்கு அதிகாரமில்லை. இப்பொழுது ஒரு வழக்கை விசாரிக்கும் நீதிபதிக்கு சில சந்தர்ப்பங்களில் வட்டியைக் குறைக்க இச்சட்டம் அதிகாரம் கொடுத்திருக்கிறது. இச்சட்டத்தில் "நியாய வட்டி" என்பது எவ்வளவு என்று குறிப்பிடப்படவில்லை. எந்தச்சந்தர்ப்பங்களில் வட்டியைக்குறைக்க நீதிபதிக்கு அதிகாரம் உண்டு என்றும் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. ஆனால் எவ்விதமான கடனாளிக்கும் இச்சட்டம் உபயோகப்படுத்தப்படலாம். ஒரு வழக்கில் பிரதிவாதி ஆஜராகாமல் இருந்தால் கூட வட்டியைக் குறைக்க கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. இன்சால்வெண்ட் கொடுக்க வேண்டிய கடன்களுக்குக்கூட இன்சால்வென்சி நடவடிக்கைகளிலும் இச்சட்டம் உபயோகப்படுத்தப்படலாம்.

ஆனால், ஒரு வழக்கை விசாரிக்கும் நீதிபதிக்கு அவ்வழக்குச் சம்பந்தப்பட்ட வரையில் கடன் கொடுத்தவர், கடன் வாங்கியவர் இருவருக்குள் ஏதோ நியாயத் தவறு நடந்திருக்க வேண்டுமென்று (தகுந்த காரணங்கள் இருந்து) தோன்றினல்மட்டில் கடன் வாங்கியவருக்கு அந்நீதிபதி சில பரிகாரங்கள் அளிக்கலாம். அதாவது:— (1) கடனாளி கொடுக்கவேண்டியதாக ஒப்புக் கொண்டிருந்தபோதிலும் மறுபடியும் ஆதி முதல் கணக்குகளைப் பரிசீலனை செய்து "அதிக வட்டி" என்று தோன்றும் தொகையை ரத்து செய்யலாம். "அதிக வட்டி" என்றால் எவ்வளவு என்று இச்சட்டத்தில் சொல்லப்படவில்லை. ஒவ்வொரு வழக்கிலும் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு எது நியாய வட்டி என்று தீர்மானம் செய்ய நீதிபதிக்கு அதிகாரமிருக்கிறது. அதிகமாய்த் தோன்றும் வட்டியைமட்டில்தான் நீதிபதி குறைக்கலாம். அசல் தொகையின் எந்தப் பாகமும் இச்சட்டத்தால் பாதிக்கப்படமாட்டாது. (2) கடன் வாங்கியவர் கணக்குப் பார்த்ததுபோதும், அதை ரத்து செய்துகொண்டதுபோதும், புதிதாகக் கடன் வாங்கியதுபோதும் தஸ்தவேஜிகள் முதலிய எழுதிக்கொடுத்தாவது வேறுவிதமாகவாவது புதுக் கடனை ஒப்புக் கொண்டிருந்தபோதிலும் மறுபடியும் ஆரம்பத்திலிருந்து கணக்குகளைப் பார்த்து அதிக வட்டியை ரத்து செய்வதுடன் ஏற்கனவேயே கடன் கொடுத்தவர் வாங்கி இருக்கும் "அதிக வட்டியை" யை திருப்பிக் கொடுக்கும்படிக்கும்கூட நீதிபதி உத்தரவு செய்யலாம். (3) கடன் வாங்கியவர் ஏதாவது ஜாமீன் அல்லது ஈடு கொடுத்திருந்தாலும் கடன் சம்பந்தமாய் எவ்விதமான ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருந்தாலும் அவைகளை ரத்து செய்யவும், குறைக்கவும், மாற்றவும் நீதிபதிக்கு அதிகாரமுண்டு.

கடனும் - வட்டியும்

(V. S. விஜயராகவாச்சாரி B. A., B. L.)

சமூகத்தில் வாழ்க்கை நடத்துபவரில் பெரும்பான்மையோர் பிறருக்குக் கடன் கொடுத்தவராகவாவது அல்லது பிறரிடம் கடன் வாங்கியவராகவாவது இருப்பது சகஜமே. ஒரு சமயத்தில் கடன் வாங்கியவர் வேறு சமயத்தில் கடன் கொடுப்பவராக மாறுவதும், ஒரே சமயத்தில் கடன் வாங்கியும் கடன் கொடுத்தும், நிலைமை மாறி மாறி வருவதும் இயற்கைதான். ரொக்கமாக இல்லாவிட்டாலும் பண்டங்களை வியாபாரத்திலோ வேறு சந்தர்ப்பங்களிலோ கடனுகக் கொடுத்தும் அல்லது கடனுக வாங்கியும் பற்று வரவு செய்து வருவதும் உண்டு. வட்டியை உத்தேசித்தே கடன் கொடுத்து, தொழில் நடத்தும் தனி நபர்களும் பாங்குகளும் இருக்கின்றன.

இப்பொழுது இருக்கும் சட்டங்களில் கடனும் வட்டியும் என்ற விஷயம் எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு சிக்கலுமானது. சில வருடங்களுக்கு முன் இப்பிரச்னை இவ்வளவு சிக்கலாக இல்லை. ஒருவருக்கொருவர் என்ன தொகை கடன் கொடுத்து வாங்கிக் கொண்டாலும், என்ன வட்டி கொடுக்க வேண்டுமென்று மனப்பூர்வமாய் ஒப்பந்தம் செய்து கொண்டாலும் அதைச்சட்டம் தடுப்பதுமில்லை; கடன் கொடுத்தவர் அத்தொகையை வசூல் செய்வதில் சட்டம் தலையிடுவதுமில்லை என்று இருந்தது. சட்டம் கடன் கொடுத்தவருக்கே தேவையான உதவி புரிந்து வந்ததென்று கூடச் சொல்லலாம்.

ஆனால் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. கடன் வாங்குபவர்களைக் காப்பாற்ற அரசாங்கமே குறுக்கிட வேண்டிய நிலைமை வந்தது. இதற்காக நாளடைவில் பல சட்டங்கள் இயற்றப் பட்டுள்ளன. இன்னும் இது சம்பந்தமான சட்டங்கள் புதிது புதிதாயும் வந்து கொண்டிருக்கின்றன. இப்புதுச் சட்டங்களால் கடன் வாங்கியவரும் கொடுத்தவரும் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் ஏற்பாடுகளும் காற்றில் பறந்தன. வட்டிகள் குறைக்கப்பட்டன; ரத்து செய்யப்பட்டன; சில கடன்களின் அசல் தொகைகளில் கூட ஒரு பகுதியோ ஜாடாவுமோ மறைந்து போயின. இச்சட்டங்கள் என்ன? இவை கடன் வாங்கியவர்கள் எல்லோருக்கும் ஒரே தினுசான சட்டங்கள்தானு அல்லது வெவ்வேறான கடனாளிகளுக்கு வெவ்வேறான சட்டமா?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

(2) 1946-ம் வருடத்திய சென்னை ஜாகை வாடகை கண்ட்ரோல் சட்டம் 1-10-1948 முதலும் (3) 1946-ம் வருடத்திய சென்னை ரயத்துப்பாதுகாப்புச் சட்டம் 8-10-1948 முதலும் (4) 1946-ம் வருடத்திய சென்னை சொந்தக் காடுகளைப் பராமரிப்புச் சட்டம் 3—12—1948 முதலும் அமுலில் இருந்ததாகவே கருதப்பட வேண்டுமென்றும் இனிமேலும் இந்த அவசரச் சட்டம் அமுலில் இருக்கும் வரை மேற்கண்ட சட்டங்களும் அமுலில் இருக்குமென்றும் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. அவசரச் சட்டங்கள் 6 மாதம்தான் உயிருடனிருக்கும். பிறகு தானுக ரத்தாகிவிடும். ஆகையால் மேற்கண்ட 4 சட்டங்களும் இந்த அவசரச் சட்டம் பிரசுரமான 16—8—49 தேதியிலிருந்து 6 மாதம்தான் அமுலில் இருக்கும். அதாவது, 16—2—1950 வரையில். ஆனால், அதற்குள் சட்டசபை கூடி இந்த அவசரச் சட்டத்தின் ஷரத்துக்களையே சாதாரண சட்டமாக்கலாம்.

(16—8—49 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் IV B பக்கம் 141)

லஞ்சம்

சர்க்கார் விசாரணை முறை

ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் லஞ்சம் வாங்குவதாக புகார் ஏற்பட்டால் அதை சர்க்கார் எப்படி விசாரணை செய்கிறார்கள், எப்படி முதலில் ரகசியப் போலீசார் புலன் விசாரிக்கிறார்கள், பிறகு யார் விசாரணை நடத்துகிறார்கள் என்ற மிக முக்கியமான விஷயத்தைப்பற்றிய விவரங்களை விசாரணை டிரிபுனல் தலைவர் ஸ்ரீ டி. அனந்தாச்சாரியார் "சென்னைச் செய்தி" யில் எழுதியிருக்கும் ருசிகரமான இந்தக் கட்டுரையை படிக்கத் தவறாதீர்கள்.

1944-ம் வருஷ முடிவு வரை தங்கள் அதிகாரத்துக் குட்பட்ட உத்யோகஸ்தர்கள், சிப்பந்திகள் மீது ஏற்பட்ட லஞ்சப் புகார்கள், ஒழுங்கீனமான நடத்தைகள் பற்றிய விசாரணைகளை அந்தந்த இலாகாவின் தலைமையதிகாரிகளே செய்து வந்தனர். இவர்களின் முடிவுகள் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் பரிசீலனைக்கு வந்த போது இவற்றில் பலவிதக் குறைபாடுகள் இருப்பதும், விசாரணைகள் நடத்தப் பட்டதில் நடை முறையில் பல தவறுகள் நடந்திருப்பதுங் கண்டுபிடிக்கப்பட்டன. பல கேஸ்களில் புனர் விசாரணை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பிறகு 93-வது பிரிவுப்படி கவர்னர் ஆட்சி நடைபெற்று வந்த காலத்தில், இவ்விதமான இலாகா விசாரணைகளைத் தகுந்த அனுபவம் வாய்ந்த நீதி அதிகாரியே நடத்த வேண்டுமென்பதாக நமது சர்க்கார் முடிவு செய்தனர். இதற்கு இந்திய சர்க்காரின் அனுமதியையும் பெற்றனர். இந்த வகையில்தான் 1944-ம் வருஷம் நவம்பர் மாத வாக்கில் விசேஷ அதிகாரி நியமனம் ஏற்பட்டது. இந்த ஸ்பெஷல் ஆபீஸர் 1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் முதற்கொண்டுதான் சரியானபடி வேலை செய்ய ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் நீதி இலாகா, ரெவினியூ, கலால், விற்பனை வரி, போலீஸ் ஆகிய இலாகா அதிகாரிகள் விசேஷ அதிகாரியால் விசாரிக்கப்படுவதினின்றும் விலக்கப்பட்டிருந்தனர். ஆனால் ஒரு வருஷத்துக்குப் பிறகு, நீதி இலாகா அதிகாரிகள் தவிர, இதர இலாகாக்களின் அதிகாரிகள் பற்றிய விசாரணைகளை நடத்தவும் விசேஷ அதிகாரிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

விசேஷ அதிகாரியின் விசாரணைக்கு அனுப்பப்படும் கேஸ்கள், பொதுவாக உத்தியோக நீக்கமாகவோ, டிஸ்மிஸ் செய்யப்படுவதாகவோ, கட்டாயமாக வேலையை விட்டு ரிடையராகும்படி செய்யப்படுபவைகளாகவோ அல்லது 'ரிடக்ஷன்' செய்யப்படக்கூடியவைகளாகவோ இருந்து வந்தன. 'சென்ஷூர்' மட்டும் செய்யப்படக்கூடியவையும், வெறும் அபராதம் மட்டும் விதிக்கக்கூடியவையுமான கேஸ்கள் இவரது விசாரணைக்கு அனுப்பப்படுவதில்லை.

மாகாணம் பூராவும் உள்ள சர்க்கார் அதிகாரிகள் மீது கூறப்படும் புகார்களை எல்லாம் ஒரே அதிகாரி விசாரிப்பது காரிய சாத்தியமில்லை என்பது நடை முறையில் தெரிய வந்தது. எனவே 1947-ம் வருஷம் மார்ச்சு மாதம் ஒரு உதவி விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டார். இவர் கீழ்த்தர சர்க்கார் சிப்பந்திகள் பற்றிய புகார்களையும், ரூ. 80-ம் அதற்குக் குறைவாகவும் சம்பளம் வாங்கும் உயர்தர உத்தியோகஸ்தர்கள் பற்றிய குற்றங்களையும் விசாரிக்க வேண்டியது. இது கையாளப்பட்டதில் மேலும் சில விஷயங்கள் அனுபவத்தில் வெளிப்பட்டன. அதாவது இந்த ரக அதிகாரிகள், சிப்பந்திகள் சம்பந்தப்பட்ட குற்றங்கள் மேலே விசாரணைக்கனுப்பப்பட்டால் பொறுப்புள்ள அதிகாரிகளின் கௌர

வமும், அந்தஸ்தும் குறைந்து விடும் என்பதும், தங்களுக்குக் கீழ் வேலை செய்யும் க்ளார்க்குகள், பியூன்கள் போன்றவர்களை இவர்கள் தங்கள் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கச் செய்ய முடியாதென்றும் காணப்பட்டது. ஏனென்றால் இப்பேர்ப்பட்ட சிப்பந்திகளுக்கும் தங்கள் கேஸ்களும் விசேஷ அதிகாரிகளின் விசாரணைக்குத் தான் போகும், ஆகையால் ஸ்தல அதிகாரிகளுக்குப் பயப்பட வேண்டியதில்லை என்ற மனப்பான்மை வளர்ந்து விடக்கூடும். இதை முன்னிட்டு 1948-ம் வருஷம் மார்ச்சு மாதம் உதவி அதிகாரி உத்யோகம் எடுக்கப்பட்டது. 150 ரூபாய்க்குக் குறைவான சம்பளம் வாங்கும் சர்க்கார் சிப்பந்திகள் சம்பந்தமான புகார்கள் பூராவையும் அந்தந்த இலாகாவினரே விசாரித்து முடிவு செய்ய வேண்டும் என்றும் அது முதல் தீர்மானிக்கப்பட்டது. முடிவு செய்யப்பட வேண்டிய பல கேஸ்கள் முடங்கிக் கிடந்தபடியால் 1948-ம் வருஷம் மே மாதம், தற்காலிக நடவடிக்கையாக, ஒரு கூட்டு விசேஷ அதிகாரி நியமிக்கப்பட்டார்.

சர்க்கார் இலாகாக்களில் இருக்கும் லஞ்ச ஊழல்கள் பற்றி விசாரித்து, அவற்றை அகற்றுவதற்கான ஆலோசனைகளைக் கூறும்படி ஒரு கமிட்டியைச் சென்னை சர்க்கார் 1947-ல் நியமித்தனர். இதன் தலைவர் சென்னை ஹைகோர்ட்டின் தலைமை நீதிபதி கனம் பி. வி. ராஜமன்னார் அவர்கள். இக்கமிட்டியாரின் வேலை பற்றிய குறிப்பு வெகு விரிவானது. பலதர அந்தஸ்திலுமுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடத்தில் எவ்வளவு தூரம் லஞ்ச ஊழல் இருந்து வருகிறது, எம்மாதிரியான லஞ்சப்பழக்கங்கள் நடை முறையிலிருந்து வருகின்றன, இவைகளிலிருந்து வருவதற்கனுகூலமான நிலைமைகள், சந்தர்ப்பங்கள் யாவை, இம்மாதிரியான லஞ்ச ஊழல்களை ஒழிப்பதற்கு ஏற்கனவே கிரிமினல் சட்டத்திலுள்ள ஷரத்துக்கள், செக்ஷன்கள், சர்க்கார் உத்தியோக சம்பந்தமான ஒழுங்கு விதிகள், நிர்வாக உத்திரவுகள் போதுமா, போதாதாவென்பவைகளைப் பற்றி இக்கமிட்டியார் சர்க்காருக்குத் தெரிவிக்கும்படி கோரப்பட்டிருந்தனர். இவைகள் போதா விட்டால் இவைகளை எவ்விதமாக மாற்ற வேண்டும் என்பது பற்றிய சிபாரிசுகளையும் கமிட்டி செய்ய வேண்டும். இன்னும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களிடையே நிலவி வரும் லஞ்ச ஊழல்களை அடியோடு களைய தங்களுக்கு யுக்தம் என்று தோன்றும் இதர சிபாரிசுகளையும் கமிட்டியினர் கூறவேண்டும். இக்கமிட்டியார் விசாரணை செய்து தங்கள் யாதாஸ்தையும் சர்க்காருக்குச் சமர்பித்து விட்டனர். சர்க்கார் இவர்களது சிபாரிசுகளையும், ஆலோசனைகளையும் பற்றித் தீவிரமாக யோசித்து வருகின்றனர். கமிட்டியார் செய்துள்ள சில சிபாரிசுகளைச்சர்க்கார் ஏற்கனவே ஏற்று அவற்றை அமுலுக்குக் கொண்டு வந்து விட்டனர்.

கமிட்டியின் சிபாரிசுக் கிணங்க ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப்பதற்காக ஒரு ட்ரிபியூனல் 1949-ம் வருஷம் ஜனவரி 1ஆ முதல் நியமிக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு தலைவரும், ஒரு அங்கத்தினரும் கொண்டது. இப்பதவிகளுக்கும் சிறந்த அனுபவம் பெற்ற இரு நீதி இலாகா அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்; இவ்விருவர்களும் பல வருஷங்கள் ஜில்லா ஜட்ஜ்களாக சேவை செய்தவர்களாவர்.

ட்ரிபியூனலின் கடமைகள்

ட்ரிபியூனல் கீழ்க் கண்ட விஷயங்களைப் பற்றி விசாரணை நடத்த வேண்டும் :—

(1) ரூ. 150-ம் அதற்கு மேற்கொண்டும் சம்பளம் வாங்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்ட லஞ்சக் குற்றங்கள்.

(2) லஞ்சக் குற்றத்துக்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இலாகா தலைவர்களால் தண்டனைக்குட்படுத்தப் பட்டவர்களின் அப்பீல்கள்.

(3) இன்னும் சர்க்காரால் இவர்களது விசாரணைக்கு அனுப்பப்படும் மற்றும் பல கேஸ்கள்.

சாதாரணமாக ட்ரிபியூனலின் வேலை லஞ்சக் குற்றங்களை விசாரிப்பது மட்டும்தான். ஆனால் சில கேஸ்களைப் பற்றிய

விசேஷ சந்தர்ப்பங்களை ஒட்டி அவற்றையும் இந்த ட்ரிபியூனலே விசாரணை செய்ய வேண்டும் என்று உத்திரவிட சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

சாட்சிகளை ஆஜராகும்படி சம்மன் பிறப்பிக்கவும், அவர்களிடம் சத்தியம் வாங்கி விசாரணை செய்யவும், தேவையான தஸ்தாவேஜிகளைக் கொண்டு வந்து காண்பிக்கும்படி உத்திரவிடவும் ட்ரிபியூனலுக்கு அதிகாரமுண்டு. சர்க்கார் இலாகாக்கள் யாவும் இந்த ட்ரிபியூனலுக்குச் சகல விதமான உதவியையும் அளிக்க வேண்டும் என்று உத்திரவிடப்பட்டிருக்கின்றது.

அகில இந்திய செர்வீசைச் சேர்ந்த அதிகாரிகளின் மீதுள்ள பல குற்றங்களைக்கூட ஸ்பெஷல் ஆபீசர் (பின்னர் ட்ரிபியூனல்) விசாரணை செய்ய வேண்டியிருந்தது. இது மாதிரியான கேஸ்கள் விசாரிக்கப்பட வேண்டிய விதிகளுக்கு ஒப்ப விசேஷ அதிகாரிக்கும், ட்ரிபியூனலுக்கும் உதவி யளிப்பதற்காக அஸெஸ்ஸர்கள் நியமிக்கப்பட்டனர். இது போன்ற கேஸ்களில் விசேஷ நடை முறையும், விதி வழிகளும் அனுஷ்டிக்கப்படுகின்றன. இவைகள் கிட்டத்தட்ட மாகாண அதிகாரிகள் பற்றிய விசாரணை விதிகள் போன்றிருக்கின்றன. இந்தக் கேஸ்களில் ட்ரிபியூனலின் சிபாரிசுகள் கடைசி முடிவுக்காக, சில கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, இந்திய சர்க்காருக்கு அனுப்பப்படுகின்றன.

லஞ்சத்துக்கான காரணங்கள்

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குவதற்கான உண்மையான காரணங்களைக் கண்டு பிடிப்பது சுலபமான காரியமல்ல. இது முக்கியமாகச் சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒவ்வொருவருடைய ஒழுக்க மனப்பான்மையும் திட புத்தியையும் ஒட்டியதாகும். இது அவரவருடைய வாழ்க்கைத் தத்துவம், கலாச்சாரம், வளர்ப்பு, சகவாசம் முதலியவற்றைச் சார்ந்திருக்கின்றது. சில சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் உன்னத லட்சியத்தினின்றும் தவறுவதற்கு, இவைகள் தவிர, வேறு சில காரணங்களும் இருக்கின்றன. சென்ற உலக மகாயுத்த காலத்தில் யுத்த நிதி வசூலித்தல், பாதுகாப்புச் சேமிப்புக் கடன் பத்திரங்கள் விற்பனை செய்தல், யுத்த நிதிக்காக நன்கொடை நாடகங்கள் முதலிய கேளிக்கைகள் நடத்தி அதற்காக டிக்கட்டுகள் விற்பனை செய்தல் போன்ற காரியங்கள் சர்க்கார் செர்வீஸ்களில் ஒழுக்கக்குறைவை ஏற்படுத்தி விட்டன. இவ்விஷயங்களில் அக்கரை காட்டாத அதிகாரிகள் அகௌரவத்துக்கு ஆளாக்கப்பட்டார்கள்; இவைகளில் தீவிரமாக ஈடுபட்டு யுத்த ஆதரவு காட்டியவர்களுக்கு விசேஷச் சலுகைகள் வழங்கப்பட்டன.

மேலும் யுத்தத்தின் பெயரால் இதர நிர்வாகத் தரங்களும் குறைந்து போய் விட்டன. சில கேஸ்களில், உயர்தர அதிகாரிகள், தங்கள் கீழ் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் தங்கள் நிர்வாக, நீதி அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்ததை மன்னித்ததுமல்லாமல், அவ்வாறு செய்யும்படித் தூண்டியும் விட்டனர். வேறு சில முறைகேடான காரியங்களைச் செய்வதையும் ஊக்கி வந்தனர். இலாகா தலைவர்களும் யுத்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுவிட்டபடியால் மேற்பார்வை வேலையைச் சரிவரச் செய்யவில்லை; பொதுவான வீழ்ச்சிக்கு இதுவும் ஒரு காரணம்.

மற்றொரு காரணமும் இருக்கிறது; வியாபாரத் துறையிலும், முறைகளிலும் அனுபவமில்லாத அரசாங்கத்தார் வியாபாரத்திலீடுபட்டனர். உணவுப்பொருள், விவசாயக் கருவிகள் வாங்குதல், விற்பனை செய்தல்; இரும்பு, எஃகு, உரம், எரு வகையறாக்கள் விநியோகம் செய்தல் ஆகிய காரியங்கள் ஏற்கனவே இருந்த குழப்பத்தை இன்னும் அதிகரித்தது; மேலும் இப்பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களில் பெரும்பான்மையோர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள் என்பதும் கவனிக்கப்படவேண்டிய விஷயம். சர்க்கார் மேற்கொண்ட இந்த வியாபாரத் திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்காகத் தங்கள் அதிகாரிகளுக்கு ஏராளமான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டியதாயிற்று. இப்படி அதிகாரம் பெற்றிருந்தவர்கள் தங்கள் பொறுப்புகளையும், தூய கடமைகளையும் உணரவில்லை. வியாபாரிகள்

விருப்பத்துக்கு இணங்க இந்த அதிகாரிகள் இஷ்டப்பட்டு உத்திரவுகள் பிறப்பித்தால், வியாபாரிகளுக்குப் பெருந்தொகைகள் லாபம் கிடைக்கும். இப்படித் தங்களுக்குக் கிடைக்கும் பெருத்த லாபத்தில் ஒரு பங்கை இந்த அதிகாரிகளுக்குக் கொடுக்க வியாபாரிகள் தயங்கவில்லை. யோக்கியமற்ற பல சூதாடிகள் இந்த காலத்தில் வியாபாரத்தில் புகுந்தனர். இதன் காரணமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு லஞ்சம் கொடுதது் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவதற்கான முயற்சி தொடர்ந்தும் தீவிரமாகவும் நடை பெற்று வந்தன. திடச் சித்தமற்றவர்கள் ஆசைக்கு ஆளானார்கள். இது இயற்கையே.

சண்டைக் காலத்தில் ஏற்பட்ட பல இலாகாக்கள், கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட பின்னரும், உபயோகப் பொருள்களின் உற்பத்தியும், விநியோகமும் அபிவிருத்தி அடைந்த உடனும், கலைக்கப்பட்டுவிடும் என்பது தெரிந்த விஷயமே. உணவு நிலைமையில் ஏற்படும் அபிவிருத்தியும் லஞ்ச ஊழலைப் பெரும் அளவுக்குக் குறைக்க உதவியளிக்கும்.

அனுஷ்டிக்கப்படும் நடை முறை

யாராவது ஒரு அதிகாரி மீது விசாரணை நடத்தும்படி சர்க்கார் உத்திரவிடுமுன்னர் தீரயோசித்து, மிகுந்த கவனமாக விஷயங்களைப் பரிசீலனை செய்த பின்னரே முடிவான விசாரணை உத்திரவு பிறப்பிக்கின்றனர். லஞ்சம் வாங்குபவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் ஒழுக்க முறைகள் பற்றிய முன் புலன் விசாரணைகளை நடத்துவதற்காக, போலீஸ் இலாகாவில் ("X") "எக்ஸ் பிராஞ்சு" என்று ஒரு விசேஷப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் ஒரு ஜில்லா போலீஸ் சூப்பரின்டெண்டு, பல டெபுடி சூப்பரின்டெண்டுகள், பல இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். இதற்காகப் பொறுக்கி எடுக்கப்பட்டவர்கள் யாவரும் ஒழுக்கத்துக்கும், உண்மையான உழைப்புக்கும் பேர்போனவர்கள். இந்தப் பிரிவில் இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறைந்த உத்தியோகஸ்தர்கள் யாரும் கிடையாது. தங்களுக்கு வந்துள்ள ஒரு மனுவின் பேரிலோ, அன்றி வேறு காரணத்துக்காகவோ குறிப்பிட்ட ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரின் ஒழுக்க நடவடிக்கையைப் பரிசீலித்து அறிவதென சர்க்கார் முடிவு செய்தார்களேயானால், சந்தேகிக்கப்பட்ட அதிகாரி வேலை செய்யும் இலாகாவின் காரியதரிசி இதுபற்றி "எக்ஸ் பிராஞ்சு" தலைவருக்குத் தெரிவிக்கிறார். இவர் தமது ஆபீஸர்கள் மூலம் சத்தப்படாமல் புலன்கள் திலக்கி, அவற்றைத்தானும் பரிசீலனை செய்த பின் சர்க்காருக்கு அனுப்புகிறார். இங்கு அவைகள் மேலும் கடுமையான பரிசீலனைக்குட்படுத்தப்படுகின்றன; பல சமயங்களில், ஒரு அதிகாரியைப் பற்றி ட்ரிபியூனல் விசாரணை செய்ய வேண்டுமென்று முடிவு செய்வதற்கு முன்னர், இக்கேஸ்கள் சம்பந்தப்பட்ட மந்திரிகளின் பார்வைக்கும் அனுப்பப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரி மீது சாட்டப்பட்ட குற்றங்கள் ருசுவானால் முன் விவரிக்கப்பட்ட கடும் தண்டனைகள் விதிக்கக் கூடியவைகளாயும் இருந்து குற்றங்கள் ருசுவாகும் என்று ஒரு அளவு உறுதியிருக்கிறதென்றும் சர்க்காருக்குப் பட்டால்தான் இது சம்பந்தமான தஸ்தாவேஜிகள் ட்ரிபியூனலின் விசாரணைக்கு அனுப்பப்படுகின்றன.

தஸ்தாவேஜுகளைப் பெற்ற ட்ரிபியூனல் அவைகளில் காணப்படும் விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு குற்றப்பத்திரிகை தயாரித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிக்குச் சாதரா செய்கின்றது. விசாரணைத் தேதியன்று குற்றம் சாட்டப்பட்ட அந்த அதிகாரி ஆஜராகிறார். "எக்ஸ் பிராஞ்சு" போலீசாரால் பதிவு செய்யப்பட்ட ஸ்டேட்மெண்டுகளின் பிரதிகள் அவருக்கு அளிக்கப்படுகின்றன. அவரது விசாரணை சம்பந்தமாகச் சேகரிக்கப்பட்டுள்ள எல்லா தஸ்தாவேஜுகளையோ அன்றி அவர் விரும்பியவற்றையோ அவர் பார்வையிடுவதற்குச் சகல வசதிகளும் கொடுக்கப்படுகின்றன. பிறகு விசாரணை ஆரம்பமாகிறது. சாட்சிகள் விசாரிக்கப்படுகின்றனர்; எதிரி உத்தியோகஸ்தர் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்கிறார். தகுதியுள்ள கேஸ்களில் எதிரிக்கு வக்கீல் உதவியும் தரப்படுகிறது. பிராசிகியூஷன் விசாரணை முடிவடைந்த

பின்னர், தன்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் பற்றிய எதிர் வாதங்களைத்தானே எடுத்து விளக்கலாம்; தனக்கு ஆதாரமான சாட்சிகளையும் விசாரிக்கலாம். இந்த எதிரி தரப்பு சாட்சிகள் சர்க்கார் செலவிலேயே சம்மன் செய்யப்பட்டு விசாரிக்கப்படுவர். குற்றம் சாட்டப் பட்ட எல்லா அதிகாரிகளுக்கும் சாட்சியங்களின் காப்பிகள் இலவசமாக அளிக்கப் படுகின்றன. தங்கள் எதிர்வாத ஸ்டேட்மெண்டைச் சமர்ப்பிப்பதற்குப் போதுமான அவகாசம் கொடுக்கப்படுகிறது. இதையும் ட்ரிபியூனல் நன்கு ஆலோசிக்கிறது. பிறகு தீர ஆலோசித்துச் செய்யப்பட்ட ஒரு தீர்ப்பு ரூபத்தில் தங்கள் யாதாஸ்தைச் சர்க்காருக்கு ட்ரிபியூனல் சமர்ப்பிக்கிறது.

இந்த யாதாஸ்தின் காப்பி குற்றஞ் சாட்டப்பட்ட அதிகாரிகளுக்குச் சர்க்காரால் அனுப்பப்பட்டு டிரிபியூனல் செய்துள்ள முடிவுகள், சிபார்சு செய்துள்ள தண்டனைகள் பற்றிய தங்களது கருத்துக்கள், முகாந்திரங்கள் என்னவென்று கேட்கப்படுகின்றனர். இதன் மூலம் தங்கள் மீது சாட்டப்பட்டு ருசிப்பிக்கப்பட்டுள்ள குற்றங்களைப்பற்றிய விபரம் பூராவையும் மறுபடியும் சிந்தித்துப்பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இவைபற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சமர்ப்பிக்கும் முகாந்திர விளக்கங்களைச் சர்க்கார் பரிசீலனை செய்தபின்னரே எடுக்கவேண்டிய முடிவான நடவடிக்கையைப்பற்றித் தீர்மானிக்கின்றனர்.

இந்த டிரிபியூனல் ஒரு சம்பிரதாயத்தை வகுத்திருக்கிறது. அதாவது, கெஜட் பதிவான அதிகாரிகளை இரு ஜட்ஜ்களும் (அதிகாரிகளும்) சேர்ந்து உட்கார்ந்து விசாரணை செய்வதென்றும், கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள்பற்றிய புகார்களைத் தனித்தனியே உட்கார்ந்து விசாரிப்பதென்றும் நடைமுறையை ஏற்படுத்திப்பிருப்பது தான். பொதுவாக, விசாரணைகள் சம்பந்தப்பட்ட 'பார்ட்டிகள்,' சாட்சிகள் ஆகியோரின் செளகரியத்தை உத்தேசித்து, மாகாணத்தில் பலவிடங்களிலும் நடத்தப்படுகின்றன.

விசாரணைகள் நீதிநெறி முறையிலும், அதே சூழ்நிலையிலும் நடத்தப்படுவதாலும், யாதாஸ்துக்கள் அனுபவ மிகுந்த நீதி இலாகா அதிகாரிகளால் சமர்ப்பிக்கப்படுவதாலும், இவற்றின்மீது தங்கள் உத்திரவைப் போடுமுன் பப்ளிக் செர்வீஸ் கமிஷனின் அபிப்பிராயத்தைக் கலந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை என்று சர்க்கார் முடிவு செய்துவிட்டனர்.

தற்சமயம் ட்ரிபியூனலால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் நடைமுறை இதுதான்.

ட்ரிபியூனல் நியமிக்கப்படுவதற்கு முன், விசேஷ அதிகாரி இவ்வேலையைச் செய்து வந்தபோதும் இதே நடைமுறைதான் அநேகமாகக் கையாளப்பட்டு வந்தது.

வேலை வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது; அதிலும் இந்த வருஷம் வேலை ரொம்பவும் அதிகமாக ஆகிவிட்டது. ஸ்பெஷல் ஆபீசர் சமர்ப்பித்த யாதாஸ்துகளையும், சிபாரிசுகளையும் அநேகமாக எல்லாவற்றையும் சர்க்கார் அங்கீகரித்துவிட்டனர். ஜில்லா கலெக்டர்கள், ஜில்லா மாஜிஸ்ட்ரேட்கள், ஜில்லா போலீஸ் சூப்பரின்டெண்டுகள், ஜில்லா எஞ்சினியர்கள், ஜில்லா வைத்திய அதிகாரிகள், ஜில்லா பாரஸ்டு ஆபீசர்கள், டெபுடி கன்சர்வேட்டர்கள், போலீஸ் டெபுடி சூபரின்டெண்டுகள், டெபுடி கலெக்டர்கள், பள்ளிக்கூட டெபுடி இன்ஸ்பெக்டர்கள், ஜில்லாக் கல்வி அதிகாரிகள் ஆகியோரைப்பற்றிய புகார்கள், ஒழுக்க நடவடிக்கைகள்பற்றி எல்லாம் விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது. சென்னை சர்க்காரால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த முறை லஞ்ச ஊழலைக் குறைக்கப் பயன்பட்டதென்பதைப்பற்றிச் சந்தேகமே கிடையாது; இதனல் லஞ்ச ஊழல் அடியோடு தடைசெய்யப்பட்டுவிடும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

போர் நிறுத்தம் ஆன உடனடியாகவே இந்தத் தீவிர லஞ்ச ஒழிப்பு நடவடிக்கையை சர்க்கார் ஆரம்பித்தது போற்றற்குறியதோர் காரியமாகும். லஞ்சக் கேஸ்களை விசாரிப்பதற்காகத் தனி ஸ்தாபனத்தை ஏற்படுத்தியதில் நமது மாகாணம்தான் முதன்மையானதென்று நான் நம்புகிறேன்.

(சென்னைச் செய்தி 15—8—1949)

சட்டத்திலும் - எழுத்திற்கே மதிப்பு

(A. பார்த்தசாரதி நாயுடு B. A., B. L., அடிஷனல் பப்ளிக் பிராசிகூடர்.)

நீதிஸ்தலங்களில் நீங்கள் எப்பொழுதாவது வாதியாகவாவது பிரதிவாதியாகவாவது தோன்றியதுண்டா? இல்லா விட்டாலும், இவ்விஷயத்தை தெரிந்து கொள்வதில் உங்களுக்கு மிக லாபமுண்டு. சிறு சிறு விஷயங்களின் உண்மையைக் கண்டு பிடிப்பதில், நமது நீதிபதிகள் எவ்வளவு காலத்தைப் போக்க வேண்டியிருக்கிறதென்று கவனித்திருக்கிறீர்களா? அவ்வளவு காலம் சிரமப்பட்டும் உண்மையைக் கண்டு பிடிப்பதில் எவ்வளவு கஷ்டம் இருக்கின்றது? உதாரணமாக நமது நீதிஸ்தலங்களில் பெரும்பான்மையான வழக்குகள் குத்தகை, வார சாகுபடி, வாடகை முதலியவை சம்பந்தமாய் ஏற்படும் பாக்கிகளை வசூல் செய்யவும், பிராமிசரி நோட்டு, பந்தகம், கைமாற்றுக்கடன், பத்து வரவு பாக்கிகள் போன்றவைகளை வசூல் செய்யவுமே தொடரப்பட்டு வருகின்றன. யாதொரு தஸ்தவேஜுகளும் இல்லாமலும் சில சமயங்களில் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. குத்தகை வாடகை முதலியவைகளும் வாய் மொழியாகவே ஏற்படுகின்றன. வாங்கி இருக்கும் கடன்களை கொஞ்சம் கொஞ்சமாய் திருப்பிக் கொடுக்கும் போதும் குத்தகைக்கு நெல் அல்லது தானியம் அல்லது ரொக்கம் கொடுக்கும் போதும் யாதொரு ரசீதுமில்லாமல் கொடுக்கப்படுவதும் உண்டு. இதற்கெல்லாம் ஆதாரமாக இருப்பது இரு திறத்தாருக்கும உள்ள பரஸ்பர நம்பிக்கையும் நாணயமுமேயாகும்.

ஆனால் நாளடைவில் ஆரம்பத்திலிருந்த நம்பிக்கை, நாணயம், உண்மை இவைகளை இருத்தரத்தாரோ அல்லது ஒருத்தரத்தாரோ புறக்கணித்து அசத்தியத்திலும் மோசத்திலும் ஈடுபட்டு பொய்க் கக்ஷி சொல்லி ஒருவரை ஒருவர் ஏமாற்றி கோர்ட்டில் வெற்றியடைய முயற்சி செய்வதுண்டு. இப்படி இருக்கும் வழக்குகளில், ஒவ்வொரு கக்ஷிக்காரரும் தன்தன் கக்ஷியை ருசு செய்ய தஸ்தவேஜுகள் இல்லாத காரணத்தினால்வேறுசாக்ஷிகளைக்கொண்டும் ருஜுப்பிக்கும அவசியம் ஏற்படுகின்றது.

ஒரு சிறிய உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு பிராமிசரி நோட்டின் பேரில் தொகை கிடைக்க வேண்டுமென்று கடன் கொடுத்தவர் கோர்ட்டில் தாவா செய்வதாக வைத்துக் கொள்வோம். கடன் வாங்கிய பிரதிவாதி, தான் அக்கடனுக்காக ஒரு தொகை திருப்பிக் கொடுத்து விட்டதாகக் கக்ஷி சொன்னால், அக்கக்ஷியை ருசுப்பிக்க வேண்டிய கடமை அக்கக்ஷியைச் சொல்லும் பிரதிவாதியுடையதே. கடனாளி திருப்பிக் கொடுக்கும் தொகையை பிராமிசரி நோட்டிலேயே வரவு வைத்திருக்கலாம். அல்லது அதற்குத் தனி ரசீது வாங்கி இருக்கலாம். இரண்டுமில்லாமல் அவர் உண்மையாகவே நம்பிக்கையின் பேரில் ஒரு தொகை திருப்பிக் கொடுத்திருக்கலாம். வேண்டுமென்றே வாதி அதை மறைக்கலாம். ஆனால் தகுந்த ருசுவில்லா விட்டால், சில அடிப்படையான சட்ட திட்டங்களைக் கொண்டு நீதி வழங்க வேண்டிய நீதிபதி அக்கக்ஷியை ஏற்றுக் கொள்ள முடியாது. பிரதிவாதி தொகை கொடுக்கும் பொழுது அதைக் கண்ணால் வேறு ஒருவர் பார்த்துக் கொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். பிரதிவாதி திறப்பில் இந்த சாக்ஷி விசாரிக்கப்படலாம். அவர் வாதியிடம் தாக்ஷண்யமுள்ளவராக இருக்கலாம். அல்லது வேண்டுமென்றே வாதியிடம் பிரதிப் பிரயோஜனம் பெற்றுக் கொண்டு பொய் சொல்லலாம். அல்லது அவர் உண்மை சொன்னாலும் அவர் வேறு காரணங்களால் நம்பத்தகுந்த நபர் அல்ல என்று நீதிபதி நினைக்கலாம். இக்காரணங்களினால் ஒரு உண்மை விஷயத்தைச்சட்டப்

சென்னை ஜமீன் இனும் ஒழிப்பு சட்ட விதிகள் அமுல் நடத்த அதிகாரிகள்

சென்னை ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டத்தை அமுல் நடத்த மாகாண சர்க்காருக்கு ஏராளமான அதிகாரங்கள் அச்சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் என்பது மந்திரிகள் அடங்கிய சபை. அவர்களே எல்லா அதிகாரங்களையும் நேரடியாகச் செலுத்துவது அசாத்தியமாகையால் சர்க்கார் இஷ்டப்பட்டால் அந்த அதிகாரங்களை, தங்களுக்குட்பட்ட அதிகாரிகளே செலுத்தும்படி விதிகள் செய்யலாம். (செக்ஷன் 67) அதை அனுசரித்து சர்க்காரால் இப்போது விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவ்விதிகளின்படி கீழ்க்கண்ட அதிகாரிகளுக்கு சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த எந்த உத்தியோகஸ்தர்களுக்கு எந்த எந்த அதிகாரமுண்டென்றும், அவர்கள் உத்திரவின்பேரில் அப்பீல் இருக்கும் விபரமும் இந்த விதிகள் நிர்ணயம் செய்கின்றன :-

ஜமீன் இனும் எஸ்டேட்டுகளை சர்க்கார் வசப்படுத்திக்கோள்வது (செக்ஷன் 3(d)): ஜில்லா கலெக்டர் அல்லது ஜில்லா கலெக்டரால் குறிப்பிடப்படும் ரெவன்யூ டிவிஷனல் ஆபீசர், மானேஜர், தாசில்தார், டிப்டி தாசில்தார்.

யாருக்கு பட்டா கோடுப்பது: ரயத்துக்கா மேல்வாரதாரருக்கா என்று முதலெடுப்பில் தீர்மானம் செய்வது (செக்ஷன் 3 d ஷரத்து) எஸ்டேட் மானேஜர் ஆனால் அவர் ரெவன்யூ இன்ஸ்பெக்டர் அந்தஸ்துள்ளவராக இருந்தால் நிலங்கள் இருக்கும் பிரதேச தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தார் இவர்களுக்கு அதிகாரம். ஆனால் அவர்கள் செய்யும் உத்திரவின்பேரில் அப்பீல் உண்டு : (1) உத்

படி நீதிஸ்தலங்களில் ருசு செய்யாமல் போய் விடுகிறது. ஆனால், ஒருவர் கொடுக்கும் தொகைக்கு எழுத்து மூலம் ஒரு ரசீது வாங்கி இருந்தால் இவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிராது. ஒருக்கால் வாதியே தாவா செய்திருக்கமாட்டார். எழுத்து மூலம் ஒரு ரசீது இல்லாத காரணத்தினால் பிரதிவாதிக்கு ஏராளமான செலவு ஏற்படுவதுடன், மறுபடியும் வாதிக்கு அதே தொகையும் அவருடைய சிலவு தொகையும் கொடுக்கும்படி நேரிடுகிறது.

இவ்விதமாகவே கைமாற்றுக் கடன் கொடுத்ததாகச் சொல்வோருக்கும், வாய்மொழியாக வாடகை, குத்தகை முதலியவை பேசிக்கொண்டதாகச் சொல்வோருக்கும், கடன் தொகை, குத்தகை, வாடகை முதலியவைகளை ரசீது இல்லாமல் கொடுத்ததாகச் சொல்பவருக்கும், வாய் நம்பிக்கையாக பிறர்பேரில் காரணார்த்தமாக தஸ்தாவேஜுகள் முதலியவைகள் எழுதி வாங்குவோருக்கும், நோட்டீஸ் கொடுத்தால் எழுத்து மூலம் பதில் நோட்டீஸ் கொடுக்காதவருக்கும் எழுத்து மூலம் ஆதரவு இல்லாத காரணத்தினால் உண்மையை சட்டப்படி ருஜூப்பிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடுகிறது.

சில விஷயங்களில் வாய் மொழி ஏற்பாடுகள் சட்டப்படி செல்லாது. உதாரணமாய் ரூ. 100-க்கு மேற்பட்ட கிரயம், பெந்தகம் போன்றவை வாய்மொழியாகச் செய்தால் செல்லாது. எழுத்துமூலம்தான் இருக்கவேண்டும். (அதுவும் தேவையான ஸ்டாம்பில் எழுதி ரிஜிஸ்டராகி இருக்கவேண்டும்) அதைப்போல் இன்னும் பல சங்கதிகள் எழுத்துமூலம் இருக்கவேண்டுமென்று சட்டத்தில் வற்புறுத்தப்பட்டால்கூட நல்லதென்றுதான் தோன்றுகிறது. அப்பொழுதுதான் ஒருவருக்கொருவர் தயவு தாக்ஷண்யமில்லாமல் ஒவ்வொரு சிறிய சங்கதிகளுக்கும் எழுத்து மூலம் ஆதரவு ஏற்படுத்திக்கொள்வார்கள். இதில் யாவருக்கும் நன்மை உண்டு.

எங்கும் எழுத்துக்கு பலம்தான். சட்டத்திலும் எழுத்துக்கேதான் மதிப்பு அதிகம்.

திரவு செய்தவர் தாசில்தார் அல்லது டிப்டி தாசில்தார் அல்லது அதே அந்தஸ்துள்ள மானேஜராக இருந்தால் ரெவன்யூ டிவிஷனல் ஆபீசருக்கு அப்பீல் செய்யலாம். (2) மானேஜர் டிப்டி கலெக்டர் அந்தஸ்துள்ளவராக இருந்தால் டிஸ்டிரிக்ட் கலெக்டருக்கு அப்பீல் செய்யலாம். (3) மானேஜர் டிஸ்டிரிக்ட் கலெக்டர் அந்தஸ்துள்ளவராக இருந்தால் ரெவன்யூ போர்டுக்கு அப்பீல் செய்யலாம்.

ஜமீன், இனும் எஸ்டேட்டுகளுக்கு மானேஜர்நியமிப்பது (செக்ஷன் 6): மாதம் ரூபாய் 100-க்குள் சம்பளமுள்ள மானேஜர்களை ஜில்லா கலெக்டரும்; மாதம் ரூபாய் 250-க்குள் சம்பளம் உள்ள மானேஜர்களை ரெவன்யூ போர்டாரும் நியமிக்கலாம்.

(குறிப்பு: அதற்கு மேல் சம்பளமுள்ள மானேஜர்களை சர்க்காரேதான் நேரில் நியமிக்க வேண்டும்.)

ரேவன்யூ போர்டின் அதிகாரங்கள்: (1) சட்டத்தின் 11-வது செக்ஷன் ஷரத்துப்படி 1—7—1945-ல் அல்லது அதற்குப் பிறகு ஒரு நிலத்தை ஒப்புக்கொண்டு (சாகுபடி செய்பவருக்கு) பட்டா கொடுக்கலாம். (2) செக்ஷன் 18 (6)-ன் படி எஸ்டேட்டில் உள்ள கட்டிடங்களின் பாத்தியத்தை நிர்ணயிக்கலாம். (3) செக்ஷன் 20 (1) 3-வது ஷரத்துப்படி எஸ்டேட் நிலத்தில் ஒரு வருடத்திற்கு மேல் நீடிக்கும்படி ஏற்படுத்தப்பட்ட பாத்தியங்களை ரத்து செய்யலாம். (4) செக்ஷன் 22 (2) (b) பிரகாரம் ஒரு எஸ்டேட் நிலங்களை செட்டில்மெண்ட் செய்ய எந்த முறையை அனுஷ்டிப்பது உசிதமென்று தீர்மானிக்கலாம். (5) செக்ஷன் 23 (4) படி நிலத்தீர்வை விகிதத்தை நிர்ணயம் செய்யலாம்.

டைரெக்டர் ஆப் செட்டில்மெண்ட்: இவருடைய அதிகாரங்கள்: (1) லங்கா நிலங்களின் பாத்தியத்தை தீர்மானம் செய்வது. (2) நிலத்தீர்வை ஏற்படுத்தும்போது செக்ஷன் 28 (2) செக்ஷன் 32 (2) படி குளம், ஏரி இவைகளை பராமரிக்க சில பிடித்தங்கள் எவ்வளவு என்று தீர்மானம் செய்யலாம். (3) ஜமீன்தார் அல்லது இனும்தாருக்கு மத்திய காலத்தில் கொடுக்ககூடிய வருடாந்திர அடிப்படைத் தொகையை ஒரு மதிப்பாகத் தீர்மானம் செய்யலாம். (செக்ஷன் 50 (2) படி). (4) பிறகு, சரிவர கணக்குப் பார்த்து அத்தொகைகளை மாற்றலாம்.

எஸ்டேட் உத்தியோகஸ்தர்களை வேலையை விட்டு நீக்க: சட்டத்தின் செக்ஷன் 60 (1) படி ஒழிக்கப்பட்ட ஜமீன் இனும் எஸ்டேட்டுகளில் வேலை பார்க்கும் சிப்பந்திகளை (அவர்களுக்கு ஒருமாத நோட்டீஸ் அல்லது ஒருமாத சம்பளம் கொடுத்து) வேலையைவிட்டு அகற்ற சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. அந்த அதிகாரம் இவ்விதிகளின்படி கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்களால் செலுத்தப்படும். அதாவது:-

(1) மாதம் ரூ. 100 அல்லது அதற்குள் சம்பளம் வாங்கும் எஸ்டேட் உத்தியோகஸ்தரை சர்க்கார் மானேஜர் நீக்கலாம். ஆனால் அந்த மானேஜர் டிப்டி கலெக்டர் அந்தஸ்துக்குட்பட்டவராக இருந்தால் அந்த இடத்தின் ரெவன்யூ டிவிஷல் ஆபீசருக்குத்தான் இந்த அதிகாரம். (2) மாதம் ரூ. 100-க்கு மேல் ரூ. 250 வரை சம்பளம் வாங்கும் எஸ்டேட் உத்தியோகஸ்தரை ஜில்லா கலெக்டர் அந்தஸ்துள்ள சர்க்கார் மானேஜர் விலக்கலாம். மானேஜருக்கு அவ்வித அந்தஸ்தில்லாவிட்டால் அந்த இடத்தின் ஜில்லா கலெக்டர்தான் இந்த அதிகாரத்தை செலுத்தலாம். (3) மாதம் ரூ. 250-க்கு மேல் சம்பளம் வாங்கும் எஸ்டேட் உத்தியோகஸ்தர்களை ரெவன்யூ போர்டார் விலக்கலாம்.

(16—8—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 249)

எஸ்டேட்டை சுவாதீனம் எடுத்துக் கொள்ளும் சர்க்கார் அதிகாரியின் அதிகாரங்கள்: ஜமீன் இனும் ஒழிப்புச் சட்டப்படி ஒரு எஸ்டேட்டை சர்க்கார் திரப்பாக மாற்ற வேண்டுமானல் அது விஷயத்தைச் சர்க்கார் கெஜட்டில் விளம்பரம் செய்வார்கள். அந்தந்த ஜமீன் அல்லது இனும் எஸ்டேட்டை சுவாதீனம் எடுத்துக்கொள்ள அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். அப்படி நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் அந்த எஸ்டேட்டை நிர்வாகம் செய்யத் தேவையான கணக்குப் புத்தகங்களையும்,

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்

இதர சர்க்கார் அறிக்கைகள்

உணவு தானியம்

உமி தவிடு-போக்கு வரத்துத் தடை நீக்கம்: உளுந்து, பயறு, துவரை, கடலை, கொள்ளு முதலியவைகளின் உமி, தவிடு சம்பந்தப்பட்டவரையில் சென்னை 1947-ம் வருடத்திய உணவு தானிய போக்கு வரத்து உத்திரவும், சென்னை 1947-ம் வருடத்திய உணவு தானியக்கட்டுப்பாடு உத்திரவும், 28-8-1945 தேதி கெஜட் பாகம் II 581-582 பக்கங்களில் பிரசுரமாகி இருக்கும் (மாகாணததிற்குள் போக்கு வரத்தைத் தடுக்கும்) சிவில் சப்ளைஸ் கமிஷனருடைய உத்திரவும் ரத்து செய்யப் பட்டிருக்கின்றன.

(16–8–1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பககம் 765)

காகிதம்

இந்தியாவிலுள்ள பேபர் மில்களிலிருந்து நேராக காகிதம் தருவித்து வியாபாரம் செய்பவர்கள் சில ரக காகிதங்களை (ரிசர்வாக) பிடித்து வைத்திருக்க வேண்டுமென்று 7—12—1948 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 1035-ல் பிரசுரம் செய்யப்பட்டிருந்த சர்க்கார் உத்திரவு 2—8—1949 முதல் அமுல் நடத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மேற்படி உத்திரவை மறுபடியும் சர்க்கார் அமுல் நடத்த உத்தேசித்தால் கெஜட்டில் விளம்பரம் செய்யப்படும்.

(2–8–1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II பக்கம் 729)

லைசென்ஸ்

எரு வியாபாரிகள் லைசென்ஸ்

சர்க்கார் திருத்தம்

1947 சென்னை எரு வியாபாரிகள் லைசென்ஸ் உத்தரவு 4-வது பிரிவில் உள்ள உப பிரிவு (5)யை சென்னை சர்க்கார் திருத்தியமைத்திருக்கிறது.

இந்த திருத்தம் கூறுவதாவது: இந்த உத்தரவு கீழ் வழங்கப்பட்ட அல்லது மீண்டும் செல்லுபடியாக பதிவு செய்து கொள்ளப்பட்ட லைசென்சுகள், சம்பந்தப்பட்ட நிதி வருடத்தில் மார்ச் 31வ காலாவதியடையும். 1949 மார்ச் 31-ந் தேதிக்கு முன் வழங்கப்பட்ட லைசென்சுகள் 1950 மார்ச் 31வ வரை செல்லத்தக்கது.

(23—8—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II சப்ளிமெண்ட் பக்கம் 148)

ரிஜிஸ்டர்கள், பட்டா முச்சலிக்காக்கள், படங்கள், பிளான்கள் அல்லது இவைகளில் அவசியமாக தோன்றுபவைகளை மட்டில் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக்கொள்ளும்போது ஜமீன்தார் அல்லது இனம்தார் அல்லது அவர்களுடைய ஏஜண்டுகள் முன்னிலையில் மேற்கண்ட கணக்கு முதலியவற்றை சர்க்கார் உத்தியோகஸ்தர் எடுத்துக்கொண்டு அதற்கு ஒரு ஜாபிதா தயார் செய்து அதன் நகலையும் ஜமீன்தார் அல்லது இனம்தாரருக்குக் கொடுக்க வேண்டும். அவர்கள் கேட்டால், கணக்கு முதலிய தஸ்தாவேஜிகளுக்கு நகல் தயார் செய்து (யாதொரு கட்டணமும் இல்லாமல்) அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். மேற்கொண்டு ஏதாவது தஸ்தாவேஜி கணக்கு முதலியவை ஜமீன்தார் அல்லது இனம்தாரரிடம் இருப்பதாகத்தோன்றினால் அவைகளை தன்னிடம் கொடுக்கும்படி மேற்கண்ட சர்க்கார் உத்தியோகஸ்தர் அவர்களுக்கு சம்மன் அனுப்பலாம். அதன்படி அவைகளை தாக்கல் செய்யவேண்டியது ஜமீன்தார் அல்லது இனம்தாரருடைய கடமையாகும்.

(16—8—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 248)

ஜவுளி-நூல்

"என்" லைஸென்ஸ் வழங்க உத்தரவு
உபரி சரக்கை கொள்முதல் செய்ய அனுமதி

நூல், ஜவுளி மொத்த வியாபாரிகளுக்கும் சில்லரை வியாபாரிகளுக்கு 'என்' லைஸென்ஸ் கொடுக்கும்படியாக ஜில்லா கலெக்டர்களுக்கு சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர். 'என்' லைஸென்ஸ்தார்களுக்கு கோட்டா ஒதுக்கப் படமாட்டாது. ஆனால் வியாபாரிகளிடமோ மில்களிலோ உபரியாக குவிந்துள்ள நூலை யும் ஜவுளியையும் அவர்கள் கொள்முதல் செய்யலாம்.

100 நெ. நூல் நூற்கலாம்

ஜவுளி மில்களில் இனிமேல் 100-ம் நம்பர் நூல் நூற்கலாமென்று நூல் ஜவுளி கமிஷனர் விடுத்துள்ள அறிக்கை கூறுகிறது. (80-ம் நம்பருக்கு அதிகமான நம்பர் நூலை தயாரிக்கக் கூடாதென) முன்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இறக்குமதி

ஓ. ஜி. எல். உத்திரவிலிருந்து செயற்கை பட்டு நூல், பருத்தி ஜவுளி, நூல் நீக்கம்

ஓ. ஜி. எல். (ஒபன் ஜெனரல் லைசென்ஸ்) உத்திரவிலிருந்து கீழ்க்கண்ட சாமான்களை நீக்கி விடுவதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்து விட்டனர். சாமான்களின் ஜாப்தா பின்வருமாறு :

(1) செயற்கைப் பட்டு நூல் (2) பருத்தி ஜவுளி, நூல் (3) கம்பளி துணிகள் (நூல் அல்ல) (4) வாசனைத் திரவியங்கள் (5) புதுப் பழங்கள், உலர்ந்த பழங்கள் (தேங்காய், முந்திரி அல்ல) (6) மரம், மரப்பலகை, (7) பிசின் (8) பிரம்புகள் (9) கோக்கோ, சாக்கலேட் (10) வித்துக்கள் (11) கடிகாரங்கள், கடிகார சாமான்கள் (12) பழைய பத்திரிகைகள் (13) விவசாயக் கருவிகள் (14) லூபிரிகேடிங் எண்ணெய் (5) டப்பாவில் அடைத்த மீன்கள் (16) பிரயாணிகளின் 'லிப்டு'களும் அதன் பாகங்களும்.

சமீப மாதங்களில் மேற்கண்ட சாமான்களில் சில ஏகமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளதென்றும் இந்தியாவின் அந்நிய நாணயச் செலாவணி நிலைமையைப் பார்க்குமிடத்து சில சாமான்களை ஓ. ஜி. எல். லிருந்து நீக்கவேண்டிய அவசிய மேற்பட்டுள்ளதாகவும் வர்த்தக இலாகா அறிக்கை கூறுகிறது.

ஆகஸ்டு 13-ந் தேதிக்கு முன்பு மேற்கண்ட சாமான்கள் கப்பலில் ஏற்றப்பட்டிருந்தால் லைசென்ஸில்லாமலேயே அவைகளுக்கு 'கிளியரன்ஸ் சர்டிபிகேட்' அளிக்கப்படும். இந்த சாமான்கள் இறக்குமதி செய்வதற்கான விசேஷ லைசென்ஸ் பெற டில்லி இறக்குமதி கண்ட்ரோலருக்கு மனுச் செய்து கொள்ள வேண்டும்.

உளுந்து, பயறு இறக்குமதி

முன் கூட்டி பர்மிட் அவசியமே
இறக்குமதி வர்த்தக அதிகாரி விளக்கம்

சென்னை இறக்குமதி கண்டிரோலர் 31-ந் தேதிக்குப் பின் அனுப்பப்பட்ட உளுந்து, பயத்தம்பருப்பு மூட்டைகள் சென்னை துறைமுகத்துக்கு வந்திருக்கின்றன.

அவைகளை இறக்குமதி செய்ய லைசென்ஸ் அவசியமில்லை என்ற தவறான எண்ணத்தில் அவைகள் வரவழைக்கப் பட்டிருப்பதால் மேமீ 31-ந் தேதிக்குப் பின்னரும் ஆகஸ்டு 14-ந் தேதி அல்லது அதற்கு முன்புவரை அனுப்பப்பட்ட மேற்கண்ட சாமான்களை துறைமுகத்திலிருந்து எடுத்து வர அனுமதிக்கலாமென இந்திய சர்க்கார் தீர்மானித்துள்ளனர்.

முன் கூட்டி 'லைசென்ஸ்' பெற்றே மேற்கண்ட சாமான்களை இறக்குமதி செய்ய வேண்டுமென பொது ஜனங்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

ஷாப் சட்ட அறிக்கை

ஆடிட்டர்களுக்கு ஷாப் சட்டம் கிடையாது: ஷாப் சட்டத்தின் எல்லா விதிகளிலிருந்தும் ரிஜிஸ்டர்ட் அக்கவுண்டண்ட், ஆடிட்டர்கள் இவர்களுடைய காரியாலயங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(23—8—1949 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 1348)

கேள்வியும் - பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

கேள்வி: (L 1237 - புதுவைநாயகம் திருநெல்வேலி) ஒரு எள்ளுச் செக்குப் போட்டு, அதிலிருந்து வரும் எண்ணெயும் புண்ணாக்கும் விற்பனை செய்பவர் அதற்காக ரூபாய் 6 செலுத்தி லைசென்சு பெற்றிருக்கிறார். அவர் அதைத் தவிர, தனியாக எண்ணெய், புண்ணாக்கு, பருத்தி விதை விற்பனை செய்யும் தனிக் கடை வியாபாரமும் செய்தால், அவர் கடை விற்பனைக்கு மட்டில் விற்பனை வரி கொடுத்தால் போதுமா? அல்லது செக்கிலிருந்து வரும் சரக்குகளுக்கும் விற்பனை வரி கொடுக்க வேண்டுமா?

பதில்: இவர் செக்கிலிருந்து கிடைக்கும் எண்ணெய் புண்ணாக்குக்கூடச்சேர்த்து விற்பனை வரி செலுத்த வேண்டும். ஏனென்றால் ஒரே ஒரு நாட்டுச் செக்கு வைத்துக் கொண்டு அதிலிருந்து வரும் எண்ணெய் புண்ணாக்கை மட்டில் (அதாவது வேறு சாமான்கள் இல்லாமல்) வியாபாரம் செய்பவர், அதற்காக ரூ. 6 கட்டி லைசென்சு வாங்கிக் கொண்டால் தான் அவருக்கு விற்பனை வரி விலக்கு உண்டு. இவர் வேறு இடத்தில் வியாபாரம் செய்தாலும் பருத்தி விதையும் சேர்த்து வியாபாரம் செய்வதால் வரி விலக்குக் கேட்க முடியாது. அவருக்குக் கொடுத்திருக்கும் லைசென்சில் 2-வது நிபந்தனையைப் பார்த்தால் இது விளங்கும்.

கேள்வி: (L 1244 ராஜு - ஈரோடு) முகமதிய சட்டப்படி தாயாருடைய சொத்தில் அவளுடைய ஆண் குழந்தைகளுக்குக் எத்தனை பாகம்? பெண் குழந்தைகளுக்கு எத்தனை பாகம்?

பதில்: முகமதிய சட்டத்தில் ஆண்களுடைய சொத்துகளுக்கு எப்படி வார்சுக்கிரமமோ அப்படியே தான் ஸ்திரீகளுடைய சொத்துகளுக்கும். தாயாருடைய சொத்திலும் ஒவ்வொரு பெண்ணுக்கும் கிடைக்கும் பாகத்தைப் போல் ஒவ்வொரு ஆணுக்கும் இரண்டு பங்கு பாகம் உண்டு. உதாரணமாக: இறந்தவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தால் கடைசியாய்ப் பிரிக்கக்கூடிய சொத்தில் மகனுக்கு 3-ல் 2 பங்கும் மகளுக்கு 3-ல் 1 பங்கும் உண்டு. இரண்டு மகன்களும் இரண்டு பெண்களும் இருந்தால் ஒவ்வொரு மகனுக்கும் 6-ல் 2 பாகமும் ஒவ்வொரு பெண்ணுக்கும் 6-ல் 1 பாகமும் கிடைக்கும்.

கேள்வி: (L 1341 ஓடயப்பன் ராமனாதபுரம்) கோயில்களுக்கு மானிய நிலம் கிடைத்து ஒரு நபருக்கு ஜமீன் சர்வே மூலம் பட்டா ஏற்பட்டு பட்டாதார் சாகுபடி செய்யாமல் குடிகள் நீண்ட காலம் தொடர்ச்சியாய், சாகுபடி செய்து மேல் வாரத்தை மட்டில் பட்டாதாருக்குக் கொடுத்து வந்திருந்தால் குடிக்காணிபாத்தியம் சாகுபடி செய்யும் நபருக்குக் கிடைக்குமா? அல்லது இருவார பாத்தியமும் பட்டாதாருக்குச் சொந்தமா?

பதில்: இக்கேள்வியிலிருந்து மேல்வார பாத்தியம் கோயிலுக்கும் குடிக்காணி பாத்தியம் பட்டாதாருக்கும் இருப்பது போலத்

தான் தெரிகின்றது. குடிக்காணி பாத்திய முள்ளவர்கள் நிலங்களைத் தாங்களே நேரில் சாகுபடி செய்ய வேண்டுமென்பது இல்லை. அவர்கள் குத்தகைக்கு விட்டோ வேறு ஏற்பாடு செய்து கொண்டோ நிலங்களைச் சாகுபடி செய்யலாம். குடிக்காணி பாத்திய முள்ளவர்களுக்கும் அவர்களிடம் சாகுபடி செய்பவர்களுக்கும் உள்ள பாத்தியங் களுக்குச் சென்னை எஸ்டேட் லாண்டு ஆக்ட் பொருந்தாது (செக்ஷன் 19). எஸ்டேட் சட்டத்தில் சொல்லப்படும் குடிக்காணி பாத்தியம் அவ்விதம் சாகுபடி செய்பவர் களுக்கு ஏற்படாது.

கேள்வி : (L 1356-நிஜாமுதீன்) பத்து நபர்கள் கூட்டாக நடத்தும் ஒரு பெரிய கடை இரண்டு நபர்களின் விலாசத்தில் நடந்து வந்தால், இந்த இரண்டு விலாச தாரும் சேர்ந்து மற்றப் பங்குதார்களை விலகிக் கொள்ளும்படி சொன்னால், விலாச மில்லாத பங்குதார்கள் சட்டப்படி விலகிக் கொள்ளக் கடமைப்பட்டவர்களா?

பதில் : கூட்டாளிகள் எந்த விலாசம் வேண்டுமானாலும் வைத்துக் கடை நடத்த லாம். அதனால் விலாசம் உள்ள கூட் டாளிக்கு அதிக பாத்தியம் கிடையாது. கூட்டாளிகளுக்குள் கூட்டுச் சம்பந்தமாய் உடன்படிக்கை அல்லது கூட்டு பத்திரம் ஏற்பட்டிருந்து, அதில் ஒரு கூட்டாளியைக் கூட்டை விட்டு நீக்க அதிகாரம் கொடுக்கப் பட்டிருந்தாலொழிய ஒரு கூட்டாளியை நீக்க வேறு எந்தக் கூட்டாளிகளுக்கும் அதி காரம் கிடையாது. அப்படி ஒரு கூட் டாளியை (மெஜாரிடியில்) பெரும்பான்மை யான மற்ற கூட்டாளிகளால் நீக்கலாம் என்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும், அந்த அதிகாரம் நல்லெண்ணத்துடன் செலுத்தப்பட்டால் தான் செல்லும். (இந் தியன் பார்டனர்ஷிப் ஆக்ட்-செக்ஷன் 33).

கேள்வி : ஒரு கடையின் கூட்டாளி களில் ஒருவர் (முஸ்லீம்) ஒன்றும் எழுதி வைக்காமல் இறந்து விட்டால் அக்கடையில் இறந்தவருக்குள்ள உரிமைகள் அத்தனையும் இறந்தவருடைய மக்களுக்குச் சேருமா?

பதில் : கூட்டு ஒப்பந்தத்தில் இது சம் பந்தமாய் யாதொன்றும் இல்லா விட்டால் ஒரு கூட்டாளி இறந்தவுடன் அக்கூட்டுச் சட்டப்படி கலைந்து போகும். (இந்தியன் பார்ட்னர்ஷிப் ஆக்ட் - செக்ஷன் 42). ஆனால் அவ்விதம் கூட்டு கலை படாமலிருக்க வும், இறந்தவருடைய வார்சுகளைக் கூட் டாளிகளாகச் சேர்த்துக் கொள்ளவும் கூட்டு ஒப்பந்தத்தில் இடம் இருந்தால் இறந்த கூட்டாளியின் வார்சுகளும் கூட்டாளி களாகிச் சகல உரிமைகளையும் அடைகிறார் கள். அவ்விதம் ஒப்பந்தம் இல்லாமல் ஒரு கூட்டாளி இறந்து விட்டால், இறந்த வருடைய வார்சுகள், கூட்டாளிகளாக மாட்டார்கள். அவர்கள் கூட்டைப்பிரித்து, தங்களுக்குள்ள பாகத்தை பிரித்துக் கொடுக்க கேட்கலாம். அல்லது வியா பாரம் நடப்பதே உசிதமென்று தோன்றி னால் அவர்கள் (1) இறந்தவருடைய பாகத் திற்குள்ள லாபத்தை அடைந்து வரலாம். அல்லது (2) இறந்தவருடைய பாகத்திற் குள்ள தொகைக்கு வருடம் 1-க்கு ரூ. 100-க்கு ரூ. 6 வீதம் வட்டி கேட்கலாம். இரண்டில் ஒன்று கொடுக்கும்படி கூட் டாளிகளைக் கேட்கலாம். ஆனால் இறந்த வருடைய கூட்டுப் பாகத்தையே மற்றக் கூட்டாளிகள் விலைக்கு வாங்கி விடலாம் என்று ஒப்பந்தம் இருந்தால் அதன்படி வற் புறுத்த மற்றக் கூட்டாளிகளுக்குப் பாத்திய முண்டு. (இந்தியன் பார்ட்னர்ஷிப் ஆக்ட் செக்ஷன் 37) இது ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஒரே சட்டம்தான்.

கேள்வி : (L 1371-வர்த்தக காரியஸ் தர்கள் ஐக்கிய சங்கம்) மொத்த வியா பாரிகளான (1) ஏற்றுமதிக் கமிஷன் கடை (2) சரக்கு விற்றுமுதல் கமிஷன் கடை, (3) சரக்குக் கொள்முதல் செய்து விற்று முதல் செய்பவை (மூட்டைகளாக இந்த வியாபாரிகள் எல்லாம் விற்பனை செய்பவர் கள்) இந்த மூன்று ரகத்தார்களும் ஷாப் சட்டப்படி கடைகளா அல்லது எஸ்டா ப்ளிஷ்மெண்ட் என்ற வியாபார ஸ்தாபனங் களா?

பதில் : (1) ஏற்றுமதிக் கமிஷன் கடை என்பதுமட்டில் ஷாப் சட்டப்படி வியா

பார ஸ்தாபனம். (2) (3) என்பவை கடைகளையாகும்.

கேள்வி: (L 1379 — அப்துல் லதீப் —நாகப்பட்டினம்) ஒரு வியாபாரி வசூல் செய்யும் விற்பனை வரிக்கும் அந்த வியாபாரி விற்பனை வரி கொடுக்கவேண்டுமா? அதாவது ரூ. 100-க்கு விற்பனை செய்தால் அதற்கு விற்பனை வரி ரூ. 1—9—0 ஆக ரூ. 101—9—0 ஆகிறது. இந்த ரூ. 1—9—0-க்கும் ரூ. 0—0—6 விற்பனை வரி சேர்த்து ரூ. 1—9—6 கொடுக்க வேண்டுமா ?

பதில்: சட்டப்படி கொடுக்கத்தான் வேண்டும். ஒரு சாமானை வாங்குபவர் கொடுக்கும் தொகை (அதாவது விற்பனை வரி உள்பட) வியாபாரியின் "டர்ன் ஓவர்" என்ற விற்பனைத் தொகையாகிறது. "டர்ன் ஓவர்" என்ற விற்பனைத் தொகைக்குத்தான் (விற்பனை வரிச் சட்டம் 3-வது செக்ஷன் படி) வரி, கணக்கு செய்யப்படும்.

கேள்விகேட்ட மற்றவர்கள் மன்னிக்கவும்

L 1275 (இராமநாதன்) தங்கள் கேள்வியில் இருபதாயிரம் என்பதற்குப் பதிலாக இரண்டாயிரம் என்று தவறுதலாக எழுதி இருக்கிறீர்களா — மறுபடியும் சரியாக எழுதவும்.

L 1236 (அப்துல் ரகீம்) "வக்கீல்" பத்திரிகையில் விற்பனைவரி அதிகாரிகளின் அதிகாரங்களைப்பற்றி விவரமாய் சொல்லப் பட்டிருப்பதைப் படிக்கவும்.

L 1307 (கிருஷ்ணமூர்த்தி—ராமநாதபுரம்) சட்டத்தில் ஏற்படும் சந்தேகங்களை மட்டில் எழுதவும். தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி இப்படி பூராவும் விவரமாய் எழுதவேண்டாம்.

L 1317 (ஆறுமுகம்) தங்கள் கேள்விகள் விளங்கவில்லை. ஒரு கார்டில் பல கேள்விகளைச் சேர்த்துக் குழப்பப்பட்டிருக்கிறது. தாங்கள் நடு நடுவில் பிரயோகிக்கும் ஆங்கில மொழிகள் பொருந்தவில்லை.

L 1339 (துரைசாமி அய்யர்) புக் போஸ்டு மூலம் தாங்கள் இரண்டு பெரிய காகிதங்களில் 16 கேள்விகள் கேட்டு அனுப்பியது கிடைத்தது. அவைகள் எல்லாவற்றிற்கும் பதில் சொல்ல இப்பத்திரிகையின் எல்லாப் பக்கங்களும் போதாவாம். மன்னிக்கவும்.

1. 187689
சென்னை-600 008

—oOo—

சலவைக்குச் சிறந்தது!

ஆடைகளை கெடுக்காது வெண்மை தரும் !!
ஆனந்தா சோப்புகளை
உபயோகியுங்கள்
ஸ்பெஷல் கேக் சோப்புகள் எங்கும் கிடைக்கும்
உரிமையாளர்: K. கணபதி.
சாக்கோட்டை P. O. கும்பகோணம்.

பட்டு ஜரிகை ஆடை உற்பத்தியாளர் வியாபாரி
ALB
பாலகிருஷ்ணயர்
பெரிய தெரு, கும்பகோணம்

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38

தஞ்சாவூர்

தயாரிப்புகள் :—

அப்ஜா—ஆனந்தா—கதம்பா

ரஞ்சிதா—நீரடிமுத்து

நறுமணங்கமழும் ஸ்நான சோப்புகள் யாவராலும் போற்றப்படுபவை.

மொத்த வியாபாரிகள் மட்டுமே தேவைக்கு எழுதவும்.

அருண் இண்டஸ்டிரியல்ஸ் லிட்.,

ஸ்ரீரங்கம்

1. அருண் இங்க்
2. அருண் அம்லா கூந்தல் தைலம்
3. அருண் பெயின் பாம்
4. அருண் களிம்பு
5. அருண் வாசனைத் தேங்காய் எண்ணெய்
6. அருண் வாசனை விளக்கெண்ணெய்

மற்றும் வேண்டிய சாமான்களுக்கும் எழுதவும்.

மானேஜிங் ஏஜண்டுகள் :

சாரதி & வாசன் Co.,
207, கிழக்கு அடயவழிஞ்சான் வீதி,
ஸ்ரீரங்கம். (திருச்சி)

ரேடியோக்களை திறமையுடன் பழுது பார்க்க

சுதர்சன்
ரேடியோ ஹவுஸ்

சக்கரபாணி கீழவீதி, :: கும்பகோணம்.

K. S. நாராயணசாமி & கோ.,
நியூஸ் ஏஜண்ட்
மடத்துத்தெரு, :: கும்பகோணம்.

நாகப்பட்டினம், நாகூர் திருவாரூர், நன்னிலம்
இந்த இடங்களுக்கு
"வக்கீல்" பத்திரிகை
பிரத்தியேக ஏஜண்ட் :-
D. வைத்தியநாதசாமி
("பாரத தேவி" ஏஜண்ட்)
நாகப்பட்டினம்.

"இனாம் நிலங்களிலுள்ள பாத்தியதைகளும், சட்டங்களினால் ஏற்பட்ட மாறுதல்களும்" (தமிழ்)
விலை ரூ. 1—0—0
"ஜெமீன் இனாம் சட்டம் (தமிழ்)
விலை ரூ. 0—8—0

ஆசிரியர்:
R. கிருஷ்ணமாச்சாரியார் B. A., B. L.,

எல்லா இனாம் கிராமங்களிலும் நடக்கப் போகும் விசாரணைகளுக்கும் அத்தியாவசியமானது.

கிடைக்குமிடம் :
S. R. சாரி
16, பாபுநாயக்கன் தெரு, கும்பகோணம்.

FOR SCHOOL CHALKS:

GURUNATHAN EAGLE CHALK CRAYONS GURUNATHAN CHALK WORKS KUMBAKONAM **CHALK WORKS**

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam.
Edited and Published by M. R. RAJAGOPALAN at No. 48, Kalyanaraman Street, Kumbakonam.

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர், காஞ்சீவரம், கும்பகோணம்

பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்: தேவைக்கு உடனே முந்துங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு, :: கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மே. மே. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
ஜரிகை பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்

கிளை: 20, லெக்ஷிமிபுரம் 2-வது தெரு, மதுரை.

Regd. No. M. 5399

V. S. & Sons

SWEETS

குணத்திலும்

மணத்திலும்

நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள் :

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை

கும்பகோணம்

(Estd. 1925)

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.